# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 4 வியாழக்கிழமை (21-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:266


## வடக்கு – கிழக்கு மாகாணங்களை பிரிப்பது பற்றி ஜனாதிபதி கவனம்

### அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.21

வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியே பிரிப்பது தொடர்பாக ஜனாதிபதி முக்கிய கவனம் செலுத்தி வருகின்றார். அது தொடர்பான முடிவை அவர் வெகுவிரைவில் வெளியிடுவார்.

இவ்வாறு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டையாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் மாறியுள்ளன. இந்த விடயம் பற்றி அரசுடன் பேச்சுக்கள் மேற்கொள்வது அர்த்தமற்றது.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களைக் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் தங்கவைப்பது ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாகும். அந்த ஹோட்டலில் இருந்து மிக அண்மித்த பகுதியிலேயே ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ளது.

அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்கிறோம் என்று கூறிக்கொண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குழு பாரிஸ் பயணம்

கொழும்பு,ஓக.21

விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவினர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து பாரிஸுக்குப் பயணமானார்கள். பாரிஸில் இக்குழுவினர் மேற்கொள்ளும் கலந்துரையாடல்களை பிரான்ஸ் அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான தோமஸ் ஸ்ட்ராங்லண்டும் நேற்றுக்காலை பாரிஸ் பயணமானார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் வரைவு குறித்து சட்ட வல்லுநர்களுடன் இக்குழுவினர் பாரிஸில் 10 நாள்கள் ஆராயவிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு அவர்கள் கிளிநொச்சியிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் புறப்பட்டனர்.

இக்குழுவில் தொல்காப்பியன், அலெக்ஸ், (14ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்புநிதிக் கடனில் மற்றொரு பகுதி செப்ரெம்பர் 16ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரை மீளளிக்கப்படவுள்ளது.

குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 500 பேருக்கு இந்த நிதி மீளளிப்புச் செய்யப்படவுள்ளது என்று தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் தெரிவித்துள்ளார்.

மீளளிக்கப்படவுள்ளோர் விவரமும் அது தொடர்பான நடைமுறைகளும் விரைவில் உதயனில் வெளியாகும்.

### கிழக்கு மாகாணத்தில்

# பொலிஸுக்கு திடீர் ஆள்சேர்ப்பை ஆட்சேபிக்கின்றது கூட்டமைப்பு!

### நேற்று பிரதமரிடம் நேரில் சந்தித்துத் தெரிவிப்பு இன்று அமைச்சர் அமரதுங்கவிடம் விளக்கம்

கொழும்பு,ஓகஸ்ட்21

**கிழக்கு மாகாணத்தில் அவசர அவசரமாக ஐம்பது சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஐந்நூற்றி ஐம்பது பொலீஸாரை சேர்த்துக்கொள்வது என்று அரசு திடீரென எடுத்திருக்கும் முடிவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடுமையாக ஆட்சேபித்திருக்கின்றது.**

**கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து தமது ஆட்சேபத்தை அவரிடம் தெரிவித்தனர்.**

**உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவை இன்று அவர்கள் சந்தித்து அரசின் இந்த அவசர நடவடிக்கையால் எழக்கூடிய விபரீதங்களை அவருக்கு விளக்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.**

கிழக்கு நிலைமை தொடர்பாக கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோருடன் அமைச்சர் ரவூப் ஹக்கீம் விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அதையடுத்தே கிழக்கில் புதிதாக 550 பொலீஸாரை அவசர அவசரமாக சேவைக்குச் சேர்த்துக்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. இந்த விடயத்தில் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான இரா. சம்பந்தன், வீ.ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம், கே.சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், அ.சந்திரநேரு ஆகியோர் நேற்றுக்காலை நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து அரசின் இந்த முடிவுக்கு தமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

முஸ்லிம்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது முக்கியமானது. அதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால், அதற்காக அவசரப்பட்டு திடீரென தற்போதைய சமநிலையைக் குலைக்கும் விதத்தில் முடிவுகளை எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்வது எதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## அக்கினி தோஷம் நீங்கவேண்டி நல்லூரில் நேற்று தீ வளர்ப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

நாட்டின் அக்கினி தோஷம் நீங்கவென நல்லைக் கந்தன் ஆலயத்தின் தெற்கு வாயிலின் எதிரே நேற்று பெருமளவில் கற்பூரங்கள் கொட்டப்பட்டு தீ வளர்க்கப்பட்டது. சுமார் இரண்டரை மணி நேரம் அந்தத் தீ எரிந்தபடி இருந்தது.

கார்த்திகைத் திருவிழாவான நேற்று இந்த தீ வளர்க்கப்பட்டது. தெற்கு வாயிலின் எதிரே ஆறு நிரல்களில் கற்பூரங்கள் குவிக்கப்பட்டு தீ வளர்க்கப்பட்டது. பல நூறு கிலோ கற்பூரம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

மாலை 5 மணியளவில் வளர்க்க ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தீ இரவு 7.30 மணிவரையும் வளர்க்கப்பட்டது.

இதுதவிர, வழமைக்கு மாறாக நேற்று நல்லைக் கந்தன் தீவட்டி ஒளியுடனேயே வீதியுலா வந்தார். பெரும் எண்ணிக்கையிலான தீச் சட்டிகளும் ஆலயத்தின் உள்ளே எரிக்கப்பட்டன. பின்னர் சுவாமி வெளிவீதியுலா வந்த போது அந்த தீச்சட்டிகளை முத்துச் சப்பரத்துக்கு முன்பாகப் பெண்கள் வரிசையில் ஏந்திச் சென்றனர். அவர்களுக்கு முன்பாக தீவட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன. (ம-ரி-86)

### நாரந்தனை படுகொலை வழக்கு:

## நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய சாட்சிகளை கைதுசெய்யப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் பிரசாரத்துக்காக நாரந்தனைக்குச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கில் நீதிமன்றில் ஆஜராகத் தவறிய இரு சாட்சிகளைக் கைதுசெய்யுமாறு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

நாரந்தனைக் கொலைகள் மற்றும் தாக்குதல் தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் சந்தேக நபர்களான ஈ.பி.டி.பியைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மதனராஜா, அந்தக் கட்சியின் இராணுவப் பொறுப்பாளர் நெப்போலியன், வேலணை பிரதேச சபைத் தலைவர் கருணாகர குருமூர்த்தி மற்றும் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த ஜீவன் ஆகிய நால்வரும் நீதிமன்றில் ஆஜராகி இருந்தனர்.

வழக்கில் நேற்று சாட்சியமளிக்க வேண்டிய இல.77, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு ரவீந்திரன் மற்றும் 10ஆவது சாட்சியான ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

### சட்டவிரோதமான இணைப்பால் வந்த வினை

சங்கானை,ஓக.21

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று சினிமாப் படம் பார்த்த இளைஞர் ஒருவர் மின் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை மேற்கில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கணேஷ் கமலேஸ்வரன் (வயது 17) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று இரவிரவாகப் படம் பார்த்ததாகக் கூறப்படும் இந்த இளைஞர், அதிகாலை வேளை அந்த மின் இணைப்புக்களை அகற்ற முயன்றபோது மின் தாக்கி அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு சங்கானை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - சங்கரத்தையில் - துணவி பகுதியில் நேற்று அதிகாலைவேளை பனம்பழம்பொறுக்கச் சென்ற சிறுவன் ஒருவன் மின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களையோ ஆள்களையோ எமது உறுப்பினர்கள் எவரும் கடத்தவில்லை

### முகமாலைச் சம்பவம் குறித்து இளம்பரிதி விளக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.21

"முகமாலையில் வைத்து நேற்றுமுன்தினம் படையினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆள்கடத்தலிலோ ஆயுதக் கடத்தலிலோ ஈடுபடவில்லை."

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

முகமாலையில் விடுதலைப் புலிகள் இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்று நேற்று வெளியான செய்தி தொடர்பான உண்மை நிலையை யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் விளக்கினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது அமைப்பில் சமையலாளராகப் பணியாற்றும் யோகராஜா இமையுன் என்பவர் நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகள் பஸ்ஸில் கிளிநொச்சிக்குச் சென்றுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் மீது துப்பாக்கிச் சூடு ; கிரனேட் தாக்குதல்!

### ஆயினும், குறிகள் தவறி அவர் உயிர் தப்பினார்

மன்னார் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் இளையதம்பி ஹரிச்சந்திரன் மீது அவரது காரியாலயத்தின் அருகில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு 8.35 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகமும், கிரனேட் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும், அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

மன்னார் உதவிப் பொலீஸ் அத்தியட்சகரைச் சந்திப்பதற்காக மோட்டார் சைக்கிளில் தனது உதவியாளருடன் இளையதம்பி ஹரிச்சந்திரன் புறப்பட்டுச்சென்றுள்ளார். சில நிமிடங்களில் இனந்தெரியாத ஒருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளார். குறிதவறியதால் உடனே கிரனேட் தாக்குதலையும் மேற்கொண்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

குடாநாட்டில் சட்டவிரோத

# புகைப்பொருள் விற்பனையைத் தடுக்க யாழ்.வர்த்தக சமூகம் உதவவேண்டும்

## மதுவரித் திணைக்கள அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.குடாநாட்டில் மனித பாவனைக்குதவாத சட்டவிரோத புகைப் பொருள்களின் விற்பனை அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வர்த்தக சமூகம் ஒத்துழைப்பு வழங்கமுன்வரவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்.மதுவரித் திணைகளை பொறுப்பதிகாரி என்.சோதிநாதன்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக மனித உடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் சட்டவிரோத புகைப்பொருள் வற்பனை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் பதிவுசெய்யப்படாத சிகரெட் மற்றும் புகை பொருள்களை வற்பதும் விற்பனைக்காக வைத்திருப்பதும் புகையிலை வரிச் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

இச்சட்டக் கோவையின்படி இத்தகைய குற்றச்சாட்டுக்களில் பிடிபடுவோருக்கு 10 லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட தண்டப் பணம் அல்லது 5 வருட கடுழிய சிறைத் தண்டனையும் வழங்கமுடியும்.

தென்பகுதியைச் சேர்ந்த வர்த்கர்கள் தற்போதைய சமாதானச் சூழ்நிலையைப் பயன்டுத்தி சிலர் சட்ட விரோத பொருள்களை விற்பனை செய்யும் முக்கிய தளமாக யாழ்.குடாநாட்டைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய சட்டவிரோத புகை பொருள்களினால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் தீங்குகளை உணராத யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் பலர் இவற்றை பெருமளவில் விற்பனை செய்கின்றனர்.

அதுமட்டுமல்லாது, ஏனைய புகை பொருள்களின் விலைகளை விட இத்தகைய பொருள்களின் விலை மிகவும் குறைவாக இருப்பதனால் பெருமளவானோர் இவற்றை வாங்கிப் புகைக்கின்றனர். இதனால் அவர்களுக்கு பல்வேறு வகையான நோய்கள் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

இத்தகைய பொருள்களின் சந்தைப்படுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு மதுவரித்திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அண்மையில் யாழ்.நகரப் பகுதி, திருநெல்வேலிச் சந்தைப் பகுதி மற்றும் ஆனைக்கோட்டை தனியார் வீடு என்பனவற்றில் இருந்து பெருமளவான சட்டவிரோத புகைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்தோடு இப் பொருள்களை இங்கு சந்தைப்படுத்திய முஸ்லிம் வர்த்தகரையும் இனங் கண்டுள்ளோம்.

கைப்பற்றப்பட்ட கடை உரிமையாளர்களிடம் இருந்து தற்போது குறைந்தளவான தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது. முதல் தடவை என்பதாலேயே அவர்கள் மீது குறைந்தளவான தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

எனவே, யாழ்.மாவட்டத்தில் உள்ள புகை பொருள் பாவனையாளர்களின் நன்மை கருதி இத்தகைய சட்டவிரோத புகைப்பொருள்களை வற்பனை செய்வதனை தடைசெய்வதற்கு யாழ்.வர்த்தகர்கள் அனைவரும் முன்வரவேண்டும்.

தொடர்ந்தும் இத்தகைய பொருள்களைத் தமது வியாபார நிலையங்களில் வைத்து விற்பனை செய்வதனை யாழ்.வர்த்தகர்கள் தவிர்க்க வேண்டும் தவறும் பட்சத்தில் இது தொடர்பாக கைதுசெய்யப்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-5)

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட

# மேலும் ஒருதொகுதி சிகரெட்டுகள் திடீர் நடவடிக்கையில் சிக்கியது

## ஆனைக்கோட்டைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ். மதுவரித் திணைக்களத்தினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையில் மேலும் ஒருதொகுதி சட்டவிரோத சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக பிரபல முஸ்லிம வாத்தகரும், ஆனைக்கோட்டை வராகி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த ஒருவரும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகள் குழு கடந்த வாரம் ஆனைக் கோட்டைப் பகுதியிலுள்ள பொன்னம்பலம் இரத்தினசபாபதி என்ற நபருடைய வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடத்தியபோது ஒரு லட்சத்து 70 ஆயிரம் 'மாவள் ஹிஹாஸ்' என்றழைக்கப்படும் பாவனைக்குதவாத சிகரெட்டுக்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

தென்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகரான சலாம் என்பவர் கொழும்பிலிருந்து யாழ்.குடாநாட்டில் விற்பனை செய்வதற்காக மேற்படி நபரின் வீட்டில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சிகரெட்டுக்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் - இதனை அடுத்து தென்பகுதி வர்த்தகரை விசாரணைக்கு உட்படுத்தயபோது அவரிடமிருந்து மேலும் 35 ஆயிரத்து 890 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் -

மது வரி அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - மேற்படி ரகத்திலான சிகரெட்டை உற்பத்தி செய்யும் நிறுவன உரிமையாளரை நாளை மறுதினம் யாழ்மதுவரித் திணைக்களத்தில் இடம்பெறவுள்ள விசாரணைகளுக்கு சமுகமளிக்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

குடாநாட்டில் கைப்பற்றப்பட்ட இரண்டாவது தொகுதி சட்டவிரோத சிகரெட்டுக்கள் இவை ஆகும்.

(எ-5)

# ஜனக எம்.பி. மருத்துவமனையில்; பரிசோதனைக்கு நீதிவான் ஏற்பாடு

பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருக்கும் மாத்தளை மாவட்ட பொ.ஐ. முன்னணி எம்.பியான ஜனக பண்டார தென்னக்கோன் கொழும்பில் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று தம்புள்ள நீதிமன்றத்தில் அவரது சட்டத்தரணி நேற்றுமுன்தினம் தெரிவித்திருக்கிறார்.

இதனையடுத்து, கொழும்பு கோட்டை நீதிவானுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்த தம்புள்ள பதில் நீதிவான் சுனில் புலனவெவ, அந்த அறிக்கையை கோட்டை நீதிவானிடம் சமர்ப்பிக்கும்படி தம்புள்ள குற்றத் தடுப்பு பொலீஸ் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

கோட்டை நீதிவானுடன் மருத்துவமனைக்குச் சென்று , சந்தேகநபரை நீதிவான் பரிசோதித்து வழங்கும் உத்தரவின்படி செயற்படுமாறும் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையே, தம்புள்ளவில் நடைபெற்ற பயமுறுத்தல் சம்பவம் தொடர்பாக தென்னக்கோனுடன் பிடிவறாந்து பிறப்பிக்கப்பட்டிருக்கும் தம்புள்ள பிரதேச சபை உறுப்பினர் ஜாலிய ஒபாத்த, ஆர்.ரஞ்சித் ஆகியோர் நேற்றுமுனதினம் தம்புள்ள நீதிமன்றத்தில் சட்டத்தரணி மூலம் சரணடைந்தனர்.

(எ)

# வாவிக்குள் மினிபஸ் குடைசாய்ந்து மட்டக்களப்பில் 28 பேர் காயம்!

## சேவைக்கு லாயக்கற்றது என்று பயணிகள் விசனம்

மட்டக்களப்பு,ஓக.21

மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனையை நோக்கி பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று சத்துருக்கொண்டான் வீதியை விட்டு விலகி மட்டக்களப்பு வாவிக்குள் குடைசாய்ந்ததில் 28 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஐவர் படுகாயமடைந்தனர். நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

காயமுற்றவர்களில் 12 பேர் பெண்கள். அனைவருக்கும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. பாவனைக்கு உரியதல்லாத நிலையில் மோசமாகச் சேதமுற்றிருந்த மினி வான் ஒன்றே இவ்வாறு திடீரென வீதியை விட்டு விலகி குடைசாய்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் சேவையில் ஈடுபட்ட இந்த வாகனத்தின் தரம் - நிலை - குறித்து அதில் பயணம் செய்து காயமடைந்த பலரும் விசனம் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வைத்தியசாலை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்ற பின்னர் அங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்கு இந்த வானில் பயணித்த பெண் ஒருவரும் இந்த விபத்தில் சிக்கியுள்ளார். அவர் மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ)

கட்டளையை நிறைவேற்றவிடாது

# நீதிமன்ற அதிகாரிகளை தடுத்த மூன்று பேர் பொலீஸாரால் கைது

## அச்சுவேலிப் பகுதியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.21

நீதிமன்ற கட்டளையை நிறைவேற்றச் சென்ற அதிகாரிகளைத் தடுத்து அச்சுறுத்திய மூவரை அச்சுவேலிப் பொலீஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

யாழ்.நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி தமக்கு உரிமையில்லாத வீட்டில் குடியிருந்த புத்தூர் வடக்கைச் சேர்ந்த இராசரட்ணம் பூமணி என்பவரை அவ்வீட்டிலிருந்து வெளியேற்றி நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். நீதிமன்றப் பதிவாளர் தலைமையிலான அதிகாரிகள் குழு நேற்று அங்கு சென்றது.

அவ்வீட்டில் குடியிருந்த மேற்படி நபர் உள்ளிட்டோர் அவ்வீட்டிலிருநது வெளியேற மறுப்புத் தெரிவித்ததோடு, கட்டளையை நிறைவேற்றச் சென்ற அதிகாரிகளைத் தமது கடமையை நிறைவேற்றவிடாது தடுத்ததுடன் அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

தமது கடமையை நிறைவேற்ற முடியாத அதிகாரிகள் இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையததிலும் அச்சுவேலிப் பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு சென்ற அச்சுவேலிப் பொலீஸார் அவ் வீட்டிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைக் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் அச்சுவேலிப் பொலீஸார் இன்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ளனர்.

(எ-5)

# இலங்கைத் தமிழருக்கு உரிய தீர்வு; இதுவே ஆஸ்திரேலியாவின் விருப்பம்

## அந்நாட்டு பிரதித் தூதர் செயலகக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

இலங்கைத் தமிழ்மக்கள் எதிர் கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு விரைவில் உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஆஸ்திரேலியா ஆர்வமாக உள்ளது என நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இலங்கைக்கான ஆஸ்திரேலியப் பிரதித் தூதுவர் கேற் லோகன்ட் அம்மையார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக்காலை வருகைதந்த ஆஸ்திரேலியப் பிரதித் தூதுவர் யாழ்.செயலகத்தில் அதிகாரிகளுடன் குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல், செயலகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மற்றும் தலைமைச் செயலக உதவி அரசாங்க அதிபர் எஸ். வேல்முருகு ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகளால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தென்மராட்சி உயர்பாதுகாப்பு வலயத்தில் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுதல், குடாநாட்டில் காணப்படும் சிவில் நிர்வாக நடவடிக்கைகள், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்கள், கடலுணவு ஆகியவற்றைச் சந்தைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி ஆஸ்திரேலியப் பிரதித் தூதுவர் அரச அதிகாரிகளிடம் கேட்டறிந்துகொண்டார்.

புனரமைக்கப்பட்டுள்ள யாழ். பொது நூலகத்தையும் பிரதித் தூதுவர் பார்வையிட்டார்.

(எ-5)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.21

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அறநெறிப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் இதில் கலந்துகொள்வர்.

(எ)

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் கேற் லோகன்ட் அம்மையார், மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல், திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோருடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.



# சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு அரிசி மட்டுமே வழங்கத் தீர்மானம்

## மேலதிக நெல் கையிருப்பைத் தீர்க்க ஏற்பாடு

கொழும்பு,ஓக.21

தற்பொழுது நெல் மேலதிகமாகக் கையிருப்பில் இருப்பதால் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு நிவாரணமாக அரிசி மட்டுமே வழங்குவதென அரசு தீர்மானித்திருக்கிறது. நெல் கையிருப்பு முடியும் வரை இது தொடரும்.

இதன்படி செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் ஒவ்வொரு மாதமும் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு வழங்கப்படும்.

இப்பொழுது நெல் அறுவடை ஆரம்பித்திருப்பதால் நெல் கொள்வனவிற்காக நெற்குதங்களை காலியாக்குவதற்காகவே அரசு இத்தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறது.

இதற்கிடையே, உடனடியாக 30 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கால்நடைகள் உணவு தயாரிப்பதற்காக பிரீமா நிறுவனத்துக்கு வழங்குவதெனவும் அரசின் பொருளாதாரக் கொள்கைக் குழு தீர்மானித்திருக்கிறது.

(எ)

# நெல்லியடியில் இன்று முதல் கூட்டுறவு விழா

யாழ்ப்பாணம்,ஓக.21

கடவேலி - நெல்லியடி ப.நோ. கூ.சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் நிகழ்வுகள் இன்று தொடக்கம் நாளைமறுதினம் சனிக்கிழமை வரை மூன்று தினங்கள் தினமும் காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மூன்று நாள் நிகழ்வுகளில் புலமையாளர்கள் அறிமுகம், புலமைப் பரிசில் வழங்கல், அறிஞர்கள் பாராட்டு, பட்டமளிப்பு, கூட்டுறவாளர் கௌரவிப்பு, ஊக்குவிப்பு, புத்தகக் கண்காட்சி மற்றும் விற்பனை என்பன இடம்பெறும்.

இன்றைய முதல் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், இரண்டாம் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் மூன்றாம் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பொ.புஷ்பக்குமாரும் கலந்துகொள்ளவுள்ளார்.

(எ-10)

# கிழக்குப் பல்கலை ஊழியர்கள் திருமலையில் நேற்று ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,ஓக.21

கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். திருகோணமலை வளாகம் எதிரே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டதில் திருகோணமலை வளாக ஊழியர் பிரதிநிதிகளும் இணைந்து கொண்டனர். அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டிருக்கும் வேலைநிறுத்தம் நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

சம்பள முரண்பாடுகளை நீக்குதல் உட்பட 21 கோரிக்கைகளை முன்வைத்து இவ்வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்தும் பதாகைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெருசலேமில் பஸ் வெடித்துச் சிதறியதால் 20 யூதர்கள் பலி; 100 பேர் வரை காயம்!

## சமாதானப் பேச்சுக்கள் அடியோடு குழம்பின



இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான பஸ்.

டெல்அவிவ்,ஒகஸ்ட்21

**ஜெருசலேமில் யூதர்கள் வாழும் பகுதியில் பஸ் ஒன்று வெடித்துச் சிதறியதில் இருபதுக்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கிறார்கள்; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். யூதர்கள் அணியும் உடையணிந்து வந்த ஒருவரே தற்கொலைத் தாக்குதலை நடத்தினார் என்று பொலீஸார் கூறுகின்றனர். இச்சம்பவத்தையடுத்து மத்தியகிழக்கு சமாதான முயற்சிகளில் இருந்து இஸ்ரேல் விலகவுள்ளதாக இஸ்ரேலிய உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

நேற்று அதிகாலை கிழக்கு ஜெருசலேமையும், மேற்கு ஜெருசலேமையும் பிரிக்கும் இடத்தில் பஸ்ஸில் குண்டு வெடிப்பு நடந்துள்ளது. பலியானவர்களில் முதியவர்களும், சிறுவர்களும் உள்ளடங்குவர்.

குண்டுவெடித்ததையடுத்து உடல்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. குண்டுவெடித்த பஸ் தீப்பற்றி எரிந்ததால் உடல்கள் பொசுங்கி நாற்றம் அடித்தன.

சம்பவத்தையறிந்ததும் அங்கு விரைந்த மீட்புப் பணியாளர்கள் உடல்களைப் பொறுக்கி எடுத்துச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டனர்.

குண்டுதாரி எங்கிருந்து பஸ்ஸினுள் ஏறினார் என்பது தெரியவில்லை என்றும் - ஆனால், பஸ்ஸின் நடுவேதான் குண்டுவெடித்தது என்றும் - குண்டுவெடித்ததையடுத்து பஸ்ஸின் பின்புறமாக நெருங்கி வந்த வெள்ளை நிறக்கார் ஒன்று அந்த பஸ்ஸுடன் மோதியதால் காரின் கதவுகள் தொங்கிக் கொண்டிருந்தன என்றும் பொலீஸார் கூறியுள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களில் நடந்த மிகமோசமான வன்செயல் இது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் தமது தலைவர்களில் ஒருவரை இஸ்ரேலியப் படையினர் சுட்டுக் கொன்றமைக்குப்பழிவாங்கும் விதத்தில் இந்தத் தாக்குதலை நடத்தியதாக இஸ்லாமிய புனிதப்படை (ஜிஹாத்) தெரிவித்துள்ளது.

ஜெருசலேமின் 'மேற்குச்சுவர்' புனித ஸ்தலத்திற்கு சென்று திரும்பிய மரபுமாறாக் கோட்பாடுகளைக் கொண்ட யூதர்களைக் குறிவைத்தே இத்தாக்குதல் நடந்துள்ளது.

இச்சம்பவம் இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்துக்கும் இடையில் நடந்துவரும் பேச்சுக்களை அடியோடு குழப்பிவிட்டது என்று இஸ்ரேல் கூறுகின்றபோதும், சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட இஸ்ரேல் உதவுமென்று அமெரிக்காவும் பலஸ்தீனமும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

குண்டுவெடித்ததையடுத்து மேற்குக் கரையின் நான்கு நகரங்களை பலஸ்தீனர்களிடம் கையளிப்பது தொடர்பாக நடைபெற்று வந்த பேச்சுக்களை இஸ்ரேல் நிறுத்தியுள்ளது.

மூன்று மாதத்திற்கு நிலைத்து நிற்குமென செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்தம் இத்துடன் முறிந்து விட்டது. 2005 இல் பலஸ்தீன இராச்சியத்தை அமைக்கும் சமாதானத் திட்டத்திற்கு இச்சம்பவம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்று இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தை பலஸ்தீன பிரதமர் மஹுமூட் அப்பாஸ் அபு மாஸானும் அமெரிக்க ஜனாதிபதியும் கண்டித்துள்ளனர்.

## இடி அமீனுக்கு அஞ்சலி செலுத்த உகண்டா ஜனாதிபதி மறுத்தாராம்

இறந்த சர்வதிகாரி இடிஅமீனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு உகண்டாவின் ஜனாதிபதி யொவேரி மொசேவெனி மறுப்புத் தெரிவித்தார் என்ற செய்தி தற்போது வெளிவந்துள்ளது.

அமீனின் சொந்த ஊரில் தேர்தல் வாக்குகளைப் பெருமளவில் பெற வேண்டுமாயின் இடிஅமீனின் மரணச் சடங்குகளை அரச முறையில் அடக்கம் செய்ய வேண்டும் என அதிகாரிகள் கேட்டபோதே அவர் இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

'நான் இடி அமீனைப் புதைக்க மாட்டேன், நான் அமீனைத் தொடவும் மாட்டேன், நீண்ட கரண்டியால் கூட அவரைத் தொடமாட்டேன்' என்று அவர் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இடி அமீன் செய்த அட்டூழியங்களுக்காக இதுவரை அவர் விசாரிக்கப்பட்டிருக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டியே அவரது மரணச் சடங்கை நடத்துவதற்கு உகண்டா அரசு பின்னடித்தமை குறிப்பிடத்தக்கது.

மனித உடலைச் சுவைபார்த்த இடி அமீனுக்கு அஞ்சலி செலுத்துவது எந்த விதத்தில் நியாயம் என்று உகண்டா அதிகாரிகள் சிலர் கேள்வி எழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நிலக்கரிச் சுரங்க விபத்தில் சீனாவில் 25பேர் மரணம்!

ஷாங்ஷி,ஒக.21

வடசீனாவின் ஷாங்ஷி என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் நிலக்கரிச் சுரங்கத்தில் வாயு வெடித்துச் சிதறியதில் 25இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்; இருவரைக் காணவில்லை.

37சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கத்தினுள் வேலை செய்து கொண்டிருந்த வேளை திடீரென வாயுக்குழாய் வெடித்துச் சிதறியது. இச்சம்பவத்தை அடுத்து சுரங்கத்தில் இருந்து 10 பேர் மீட்கப்பட்டனர்.

ஆரம்பக் கட்டவிசாரணைகளின் பின் வாயுக்குழாய் திடீரெனத் தீப்பிடித்ததனாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் நடந்த பகுதி மிகப் பெரிய பரப்பு என்பதால் மீட்புப் பணிகள் கடினமாக உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு வாரங்களில் சீனாவில் ஏற்பட்ட மூன்றாவது நிலக்கரிச் சுரங்க விபத்து இதுவாகும். இதற்கு முன் நடந்த இரண்டு விபத்துக்களிலும் 65பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் வாஜ்பாய் அரசு மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

புதுடில்லி,ஒக.21

இந்தியாவில் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு எதிராக மக்களவையில் காங்கிரஸ் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தது.

மொத்தம் பதிவான 498 வாக்குகளில் அத்தீர்மானத்துக்கு எதிராக 312 வாக்குகளும் ஆதரவாக 186 வாக்குகளும் விழுந்தன. அதையடுத்து, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்ததாக அவைத்தலைவர் மனோகர் ஜோஷி அறிவித்தார்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் என்று பிரதமர் வாஜ்பாய் அறிவித்தமை பாபர் மசூதி இடிப்புத் தொடர்பான வழக்கில் சதிக்குற்றச் சாட்டில் இருந்து அத்வானி, முரளி மனோகர் ஜோஷி உள்ளிட்டோரின் பெயர்கள் நீக்கபபட்டமை, கார்கில் போருக்காக ராணுவத் தளபாடங்கள் வாங்கியதில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகார் ஆகிய பிரச்சினைகளால் மக்களவையின் மழைக்காலக் கூட்டத் தொடரில் தொடர்ந்து அமளி ஏற்பட்டு வந்தது.

அதன் உச்சக் கட்டமாக, வாஜ்பாய அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கடந்த 14 ஆம் திகதி தாக்கல் செய்திருந்தது காங்கிரஸ் கட்சி.

உலக அரங்கில்

## பிரிட்டிஷ் - பிரான்ஸ் உறவில் சற்று விரிசல்

நியூயோர்க்,ஒக.21

லிபியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குமாறு ஐநா.சபையை பிரிட்டிஷ் கோரியுள்ளது. ஆனால், லிபியா மீதான பொருளாதாரத் தடையை நீக்க ஐநாவில் பிரேரணை கொண்டு வந்தால் அதனை எதிர்க்கப் போவதாக பிரான்ஸ் கூறயுள்ளது.

1988 ஆம் ஆண்டு 270 பேர் பயணித்த விமானத்தை, ஸ்கொட்லாந்தில் வைத்து லிபியர்கள் குண்டு வைத்துத் தகர்த்ததை அடுத்து லிபியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க லிபியா ஒப்புக் கொண்டதை அடுத்து அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்க பிரிட்டனும், அமெரிக்காவும் நடவடிக்கை எடுத்துள்ளன.

ஆனால், லிபியா வழங்கவுள்ள நஷ்டஈடு, உயிரிழப்புகளுக்கு போதுமானதல்ல எனக்கோரி ஐநாவில் கொண்டு வரவுள்ள பிரேரணையை எதிர்ப்பதென ஐநாவுக்கான பிரான்ஸ் தூதர் கூறியுள்ளார்.

பிரான்ஸின் இந்த முடிவை அடுத்து பிரிட்டனுக்கும், பிரான்ஸிற்குமான உறவில் சற்று விரிசல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'பிரான்ஸ்' எங்களை மிரட்டுகிறது; இப்பிரச்சினையில் சுமுக முடிவு காண இருதரப்பினரும் பேசி வருகிறோம்' என்று லிபிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## பக்தாத் குண்டுத் தாக்குதலுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம்!

பக்தாத்,ஒக.21

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமைந்திருந்த ஐநா. அலுவலகம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உலகளாவிய ரீதியில் பலத்த கண்டனம் எழுந்துள்ளது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இருபதாக உயர்ந்துள்ள அதேவேளை, காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று பக்தாத் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கட்டடத் தொகுதிக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த போதும், அதனையும் மீறி ட்ரக் ஒன்றை கட்டடத்துடன் மோதி இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினரின் பலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

ஐநா. அலுவலகம் தாக்கி தரைமட்டமாக்கப்பட்டசெயல் ஐநா.சபைக்கு மட்டுமன்றி, ஈராக்கிற்கு எதிரான செயலுமானதே என்று கண்டித்துள்ள ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான், அந்நாட்டிற்கு உதவியளிப்பதற்காக சென்ற சிரிகோ விரியபீ மெலோ கொல்லப்பட்ட இச்சம்பவத்தை [illegible] தெரிவித்துள்ளார். [illegible] விடுமுறையைக் கழிப்பதற்காக பின்லாந்துக்குச் சென்ற கொபி அனான், இச்சம்பவத்தை கேள்வியுற்றதும் மீண்டும் நியூயோர்க் திரும்பியதையடுத்து ஐநா. பாதுகாப்புச்சபையின் கொடி அரைக்கம்பத்தில்பறக்கவிடப்பட்டது. ஏனைய நாட்டுக்கொடிகள் பறக்கவிடப்படாமல் சுருக்கிடப்பட்டுள்ளன.



ஐ.நா. தூதரக இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணி நடை பெறுகின்றது.

இத்தாக்குதல் குறித்து ஐநா. பாதுகாப்பு சபைக்கு கொபி அனான் நேற்று விளக்கவுரை ஒன்றையும் நிகழ்த்தினார். அப்போது ஈராக்கில் நடைபெறும் இத்தகைய தாக்குதலுக்குப் பயந்து ஐநா. சபையோ அல்லது அதன் அதிகாரிகளோ அங்கிருந்து வெளியேறப் போவதில்லை. எவ்வாறான நெருக்கடி நிலைகள் வந்தாலும் ஐ.நா. சபையும் அதன் அதிகாரிகளும் ஈராக்கில்-பணிபுரிவர். தாக்குதலையடுத்து தரைமட்டமாகியுள்ள ஐ.நா. அலுவலகக்கட்டடம் தற்காலிகமாக ஜோர்தானுக்கு மாற்றப்பட்டுள்ளது . எனினும், அது சில நாள்களில் மீண்டும் ஈராக்கிற்கு மாற்றப்படும் என்று தெரிவித்தார்.

ஈராக்கிய மக்களின் எதிர் காலத்தை இத்தகைய செயல்கள் சீரழிக்காது என்று கூறிய அமெரிக்க ஜனாதிபதி புஷ் இத் தாக்குதலகளுக்கு காரணமானவர்களை விரைவில் கண்டுபிடிப்போம் . ஐநா. பணியாளர்கள தாக்குதல்களுக்குள்ளாகியிருப்பது அதிர்ச்சியும் கவலையும் அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

ஐநா. அதிகாரி கொல்லப்பட்டிருப்பது குறித்து அவரது சகாக்கள் கூறுகையில், 'மிகச் சிறந்த ஒருவரை அனுப்பியிருந்தோம; அவர் பெட்டியில் திரும்புகிறார்'என்று கூறி தமது கவலையை வெளியிட்டுள்ளனர். அத்துடன், ஐநா அலுவலகத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட அமெரிக்கப் படையினர் மீதும் அவர்கள் சீறிப்பாய்ந்துள்ளனர்.

## டேவிட் கெலியின் விசாரணைகள் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளன

லண்டன்,ஒக.21

சர்ச்சையில் மாட்டியிருந்தவேளை மர்மமான முறையில் இறந்த பிரிட்டிஷ் விஞ்ஞானி டேவிட் கெலியின் மரணவிசாரணைகள் உச்சக்கட்டத்திற்கு வந்துள்ளன.

நேற்று நடந்த விசாரணைகளில் பிளேயரின் பேச்சாளர்களான ஹெராட்றிக் சிமித் மற்றும் ரொமி கெலி ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஹட்டன் பிரபுவின் முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

பிரதமர் பிளேயரின் அலுவலகத்துக்கும் பி.பி.ஸிக்குமிடையில் கெலி குறித்த சர்ச்சை நடந்து கொண்டிருந்த வேளை அதனை 'கோழிக்குஞ்சுகளின் சண்டை' என்று ரொமி கெலி விமர்சித்திருந்தார். அத்துடன், அவர் இது குறித்து மின்னஞ்சல் ஒன்றையும் பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பியிருந்தார்.

ரொமி கெலியின் இந்த நடவடிக்கைகள் குறித்து நேற்றைய தினம் விசாரணைகள் நடந்தன.

இந்தக்குற்றச்சாட்டுகள் நிருபணமானால் திருமதி டேவிட் கெலியிடம் இவர் மன்னிப்புக் கோர வேண்டிவரும் என்று கூறப்படுகிறது.

பிரதமரின் பேச்சாளர்கள் தவிர்ந்த ஏனைய பலரும் நேற்றைய விசாரணையில் கலந்து கொண்டனர். அவர்களில் பாதுகாப்பு அமைச்சின் [illegible] செயலாளர் சேர்ஹெவின் [illegible] உள்ளடங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் யார் தெரியுமா?" அவர் கேட்டார். நான் யார் என்று உமக்கு தெரிந்திருக்க வேண்டும் என்ற தொனி அது! எனது பெயர், பதவி, அதிகாரம், பணம், பட்டம், அந்தஸ்து, கௌரவம்... இப்படி இப்படி.

"தெரியும்" என்றார் இவர். "நீங்கள் எப்படி இருந்தீர்கள், எப்படி வளர்ந்தீர்கள், எப்படி இருக்கிறீர்கள் எல்லாம் ஓரளவுக்குத் தெரியும்?"

"ஓகோ! அப்படி உமக்கு என்ன தெரியும்"

"சொல்லுகிறேன் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் நீங்கள் ஒரு கண்ணுக்குத் தெரியாத கலம். ஒரு சந்திப்பின் விளைவு. கலமாக இருந்த நீங்கள் இன்றைக்கு நூறு திரில்லியன் கலங்களுக்கு சொந்தக்காரர். அதாவது நூறாயிரம் கோடி கலங்கள். அதில் சில கலங்கள் உங்களை இப்படிப் பேசவைக்கின்றன." என்றார் இவர்.

அவர் மாத்திரமல்ல நானும் நீங்களும்தான் கோடிக்கணக்கான கலங்களுக்குச் சொந்தக்காரர். கலம் என்றால் என்ன?

கலம் "செல்" (Cell) என்ற விஞ்ஞானச் சொல்லின் தமிழ்வடிவம். கற்களின் அடுக்குகள்தான் விண்முட்டும் மாளிகைமுதல் சாதாரண குடிசைவரை; அனேகமாக முதலாவது கல்லை ஒரு அதிகாரி நடுவார். அந்தக் கல்லிலிருந்து வீடு எழும். கொத்தனாரும் பொறியியலாளரும் அந்த ஒரு கல்லிலிருந்து தொடங்கியது, சில மாதங்களில் மாளிகையாயிருக்கும் (ஊழல் இல்லாதுவிட்டால் மட்டும் அது வான் முட்டும்).

உடலின் அடிப்படை கலம், கல் போலத்தான் முப்பரிமாணமானது. ஆனால், சாதாரண கண்ணுக்குத் தெரியாதது. ஆனால், இங்கு விஷயம் வேறு! கலம் உயிருள்ளது. கலம் தானே இரண்டாய்ப் பிரிந்து கொள்ளும். இந்தக் கலங்கள் அடுக்கப்பட்டதுதான் உடல். மனித உடலுக்கு மாத்திரமல்ல விலங்குகள், தாவரங்கள், நுண்ணுயிர்கள் வரை கலம் தான் அடிப்படை. புல்லாய்ப் பூடாகி

ஒரு கலத்தின் உள்ளே....




புழுவாய் மரமாகி பல்மிருகமாய் பறவையாய்ப் பாம்பாகி... மனிதராய் எல்லாப்பிறப்பிலும் கலமே!

அவருக்கு வயது ஐம்பது. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு சந்திப்பு அது. தாயின் கோடிக்கணக்கான கலங்களில் ஒன்றும் தந்தையின் கோடிக்கணக்கான கலங்களில் ஒன்றும் முட்டை - விந்து சந்தித்து ஒன்று சேர்ந்து ஒரு கலமாகியது. இது கருப்பையில் நிகழ்ந்தது. அந்த நேரத்தில் அவர் ஒரு கலமாக இருந்தார். அவர் அப்படியே இருந்திருந்தால் அவரை ஒரு கலவிலங்கு என்று சொல்லியிருப்போம்.

ஆனால், கலம் கல் போல யாராவது எடுத்துவைத்து கட்டுவார்களா என்று காத்திருக்கிற உயிரற்ற பொருளல்ல. அது உயிருள்ளது.

கலம் பிரியத் தொடங்குகிறது. இரண்டாய் நாலாய் எட்டாய் பதினாறாய் பிரிந்து பிரிந்து கோடிக்கணக்கான கலங்களின் கூட்டமாகிறது. இப்படிப் பிரிகின்றபோதே கலங்கள் தொழில்வாரியாக தம்மை வேறுபடுத்திக்கொள்கின்றன; அதற்கேற்றால் போல ஒழுங்குபடுத்திக் கொள்கின்றன. இப்படிக்கலங்கள் பின்னப்பட்டு அடுக்கப்பட அடுக்கப்பட உடல் ஓர் அழகான (?) மாளிகையாக எழுகின்றது.

இப்படி கலம் ஒன்று, தானே கொத்தனாராகவும் பொறியியலாளராகவும் செயற்பட்டு மூக்கும் முழியுமான, அழகான, அழகற்ற, அசிங்கமான என புறஉலகில் வகைப்படுத்தப்படு




கின்ற மனிதர்களை உருவாக்குகின்றது. ஒரு சின்னஞ்சிறிய கலம் எப்படி இப்படி....?

கலம்தான் உலகின் முதல் அதிசயம்! உலகின் முதல் உயிரினமும் தனிக்கலமாகவே இருந்தது. கலத்தினுள்ளும் ஓர் உலகம் இருக்கிறது. அது ஒரு பாய்பொருள் நிரம்பிய பை. ஒரு நுணுக்குக்காட்டியூடாகத் தெரிகிற அந்தச்சிறு உலகத்தில் கோழிமுட்டைபோல உள்ளே கரு, சூழ மிகமிகச்சிறிய அமைப்புக்கள்!

கருவில்தான் எங்கள் விதி எழுதப்பட்டிருக்கின்றது.

இது தலைவிதியல்ல! கரு விதி!

ஆள் நல்லகறுவல், தந்தையைப் போல உயரத்தில் பனை, தாயைப் போல குடமிளகாய் மூக்கும் ஆந்தை முழியும், சுருள் முடி, தகப்பனைப்போல சுடுதண்ணீயல்ல, தாத்தாபோல கொதிதண்ணி! இவையெல்லாம் கருவிலுள்ள 'டிஎன்ஏ' எனப்படுகின்ற பரம்பரை அலகுப் பெட்டகத்தினுள்ளே இருக்கின்ற தகவல்கள். இவை கொண்டுதான் கலங்கள் பிரிவது, அடுக்கப்படுவது, பின்னப்படுவது எல்லாம் நிகழ்கிறது.

தோலுக்குக்கீழே மெலனின் கலங்கள் கொஞ்சம் கூட்டு (கறுப்பாக்க!), மூக்கிலுள்ள கலங்கள் குறிப்பிட்ட அளவில் ஒருதினுசாய் பிரிந்து குடமிளகாய் கணக்கில் நிறுத்து, இப்படியெல்லாம் யாரும் கட்டளையிடுவதில்லை.

எல்லாம் இயல்பாகவே 'புரோகிராம்' பண்ணப்பட்ட கணனிபோல தொடர்ச்சியாக நிகழ்கிறது. ஏறத்தாழ இருநூற்றெண்பது நாள்கள் தாயின் கருப்பைக்குள் உருவாகி வளர்ந்த குழந்தை வெளியில் வருகின்றது.

மேலும் வளர்ந்து புறஉலகில் இப்படி ஐம்பத்திரண்டு வயதில் "நான் யார் தெரியுமா?" என்று கேள்வி கேட்கின்ற கோடிக்கணக்கான கலங்களின் கூட்டமாக முன்னே நிற்கிறது.

தசையாய், நரம்பாய், எலும்பாய், இரத்தமாய் பல்வேறு தொழிலுடன் கலங்கள்; மூளையிலுள்ள நரம்புக் கலங்களில் நிகழும் மாற்றங்கள்தான் எங்கள் நினைவுகள்; தசைகளின் நீண்ட தசைக்கலங்கள் சேர்ந்து சுருங்கும்போதுதான் கை அசைகிறது. இரத்தத்தின் கலங்கள் இரத்தக்குழாய்களில் சுற்றியோடுகின்றன. இப்படி யாதுமாகி நிற்கிற கலங்கள்தான் நாங்கள். ஒரு நாட்டின் மனிதர்கள் அதிகாரியாகவும் தொழிலாளியாகவும் காவற்படையாகவும் மருத்துவராகவும் இருப்பதுபோல கலங்கள் உடலில் வெவ்வேறு தொழில்களைச செய்து கொண்டிருக்கின்றன.

இநதக் கோடிக்கணக்கான கலங்கள் தங்களுக்குள் ஏற்றத்தாழ்வு கொண்டிருப்பதில்லை. தொழில்கள் பற்றி தன்னுணர்வு அவற்றுக்கு இருப்பதில்லை. உடலை ஓர் ஒத்திசைவான கட்டுக்கோப்புக்குள் பாதுகாப்பான தனி "அமைப்பாக" பேணுவதில் அனைத்துக் கலங்களும் ஒரே இயல்பானவை.

**வைத்திய கலாநிதி அ.கிருஷ்ணேந்திரன்**

இந்தக் கலங்கள் பல சேர்ந்தால் அதை இழையம் என்கிறோம். இழையங்கள் பல சேர்ந்து அங்கம். அங்கங்கள் பல சேர்ந்து தொகுதி.




உதாரணமாய் நாங்கள் இயங்குவது எங்கள் உடலிலுள்ள தசைகளினால், தசைக்கலங்கள் ஒன்று சேர்ந்து தசை; இது தசையிழையம். தசையும் எலும்பும் இரத்தக் குழாய்களும் நரம்பும் சேர்ந்துதான் ஒரு அங்கம் - கை (அதன் தொழிற்பாட்டில் கொடுக்கும் கை, ஈயோட்டாத கை, காக்கும் கை என பலவகைப்படும். அது வேறு), இப்படி பல அங்கங்கள் வெவ்வேறு தொழிலுக்காய் கலங்களால் பின்னப்பட்டு உருவாக்கப்படுகின்றன. இவை சேர்ந்தது தான் உடல்.

உடல் கலங்களால் ஆனது சரி. இந்த கோடிக்கணக்கான கலங்களுக்கும் சாப்பாடு, தண்ணீர்... எப்படி உடல் சமாளிக்கிறது?

கலங்கள் உயிர் வாழ உணவு, ஒட்சிசன், நீர் அவசியம். அதுவும் தங்குதடையின்றி கிடைக்கவேண்டும். கரணம் தப்பினால் மரணம்தான்.

வாயிலிருந்து தொடங்கி குடல் வழியாக குதத்தில் முடிவடைகிற சமிபாட்டுத்தொகுதி நாங்கள் உண்ணுகிற உணவை கலங்கள் பயன்படுத்தக்கூடிய முறையில் மாற்றி இரத்தத்தில் சேர்க்கிறது. மூச்செடுக்க நினைக்காமலே எடுபடுகிற மூச்சோடு ஒட்சிசன் சுவாசப்பைகளுக்குச் சென்று இரத்தத்தில் சேருகின்றது.

இரத்தக்குழாய்களின் வலைப்பின்னலால் உடலின் கலங்கள் யாவற்றுக்கும் இரத்தத்தின் மூலம் உணவும் ஒட்சிசனும் எடுத்துச் செல்லப்படுகின்றன. நல்ல இரத்தச்சுற்றோட்டம் நல்லதொரு வினியோகப்பாதை. உடலின் இரத்தவலைப்பின்னலின் நீளம் 60ஆயிரம் மைல்கள்!

உடல் ஒரு சிறந்த நிர்வாக அமைப்பு, அதன் நிர்வாகத்தில் கோடிக்கணக்கான கலங்களில் ஒரு தனிக்கலம் கூட புறக்கணிக்கப்படுவதில்லை. கால் நுனியிலிருக்கிற கலந்தானே கொஞ்சம் "அஜஸ்ட்" செய்து கொள்ளட்டுமே என்று உணவும் ஒட்சிசனும் கிடைக்காது விட்டால் அந்தக் கலங்கள் இறந்துவிடும்.

உடலின் இந்த ஒழுங்கமைப்பு குலைகின்ற பொழுது, கலங்களின் தொழிற்பாடுகள் பாதிப்படைகின்றன. கலங்கள் இறக்கின்றன. இது உடலின் முக்கிய பகுதிகளில் நிகழுகின்றபோது, அது உடனடி மரணத்துக்கு இட்டுச்செல்லுகிறது. மூளையும் இதயமும் அத்தகையவை!

இதயத்தின் இரத்தக்குழாய்களில் ஏற்படுகின்ற அடைப்பினால் இதயத் தசைக்கலங்களுக்கு உணவும் ஒட்சிசனும் கிடைப்பதைத் தடுக்கிறது. இதனால், இதயக்கலங்கள் இறக்கின்றன. இதயத்துடிப்பு நின்றுவிடுகிறது. இரத்தம் சுற்றியோடுவது நின்றுவிடுவதால் உடலின் கோடிக்கணக்கான கலங்களும் தொடர்ந்து இறந்துவிடுகின்றன. இது ஒரு தலைவனின் மரணத்தைப் போன்றது. ஒரு சில கலத்தின் மரணம் ஒரு கோடிக்கலங்களின் மரணத்துக்கு இட்டுச்செல்லுகிறது. அது ஒரு மனிதனின் மரணம்.

மனிதரைப் போலவே கலங்களுக்கும் ஒரு வாழ்வுக்காலம் இருக்கிறது. இரத்தத்தின் செங்குழியங்கள் மூன்று மாதகாலம் வாழ்கின்றன. வெண்குழியங்கள் (உடலின் பாதுகாப்புப்பிரிவு) நாள்கணக்கில் வாழ்கின்றன. இவை மீண்டும் புதிதாய் பிறக்கும் கலங்கள்! மூளையிலுள்ள நரம்புக்கலங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வரும் கலங்கள். நீங்கள் நீடூழி வாழ இவை வாழ வேண்டும். இவை சில உதாரணங்களே.

கோடிக்கணக்கான கலங்களை இப்படி வகைப்படுத்திக் கொண்டே போகலாம். கலங்கள் பற்றிய கல்வி கலவியல் (Cytology) எனப்படுகிறது.

கலங்கள் ஆரோக்கியமாக இருப்பதுதான் வாழ்வு. உங்கள் நோய்கள் ஒவ்வொன்றுக்கும் காரணம் அடிப்படையில் ஒரு கலம் பாதிக்கப்படுவது

நரம்புக்கலம்.



தான். ஒரு நோயைப் புரிந்துகொள்ளுதலில் எப்பொழுதும் ஒரு கலம் பற்றிய கலங்கலில்லாத அறிவு வேண்டியிருக்கிறது.

கண் மஞ்சளாகிறது. இரத்தத்தில் பித்தத்தின் அளவு வழமையைவிடக் கூடியிருக்கின்றது. ஈரற்கலங்கள் பாதிப்படைந்திருக்கின்றன என்கிறார் மருத்துவர்.

கலங்கள் பாதிப்படைவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

சில கலங்கள் பிரியும்போதே குறைபாடான கலங்களாகி உடலில் சேர்ந்து விடுகின்றன. இவை சம்பந்தமான நோய்கள் பிறப்பு குறைபாட்டு நோய்கள் எனப்படுகின்றன. சில நோய்கள் பரம்பரை அலகுகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளால் ஏற்படுபவை; சந்ததிக்குக் கடத்தப்படுபவை. மற்றைய அனேகமான கலப்பாதிப்புகள் சூழலினாலும் உடல் சொந்தக்காரரின் விருப்பு வெறுப்புகளினாலும் நிகழுபவை (உணவுப் பழக்கவழக்கங்கள், குடி சிகரெட், இப்படி).

அவர் 'சரி சரி' என்கிறார். கதிரையிலிருந்து எழுந்தார். மேசையோடு கால் மோதியது.

'கடவுளே' என்றார். கண்கள் கலங்கின.

"எனக்கு மேசை இடித்துவிட்டது வலிக்கிறது."

"உங்களுக்கு என்று சொல்லாதீர்கள். உங்கள் கால் கலங்களுக்கு என்று சொல்லுங்கள். அட இரத்தம் வேறு வருகிறது. உங்கள் உடலில் பலகலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன." சொல்லிக் கொண்டே இவர் எழுந்தார். (உதவிக்காகத்தான்) அவர் அதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"நான் யார் என்று காட்டுகிறேன்." சொல்லிக் கொண்டே அவர்மீது பாய்ந்தார். பிறகு என்ன இவருக்கு எல்லாம் கலங்கலாக (கலங்களாக அல்ல) தெரிந்தது. உங்கள் கலங்களை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்.

ஆயிரம் கோடி கலங்களையும் ஒன்றாய் நான் என்ற உணர்வுக்குக் கீழ் கொண்டுவர முடிகிறது. அல்லது நான் என்ற உணர்வை ஆயிரம் கோடி கலங்களுக்கு விரிவடையச் செய்ய முடிகிறது என்றால், நான் என்ற உணர்வை இந்த பிரபஞ்சமாக விரிவடையச் செய்யலாமோ... இதைத்தான் ஆன்மாவை உணர்தல் என ஆன்மீகம் சொல்லுகிறது? ✳

# கிராம அலுவலருக்கு வாகனம் வழங்காவிட்டால் ராஜினாமா!

## அமைச்சர் அலுவிகார கூறுகிறார்

கொழும்பு,ஓக.21

"கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவேண்டும் என்ற தனது பிரேரணையை அரசு கருத்தில் எடுக்காவிட்டால் தான் தனது அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப்போவதாக உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

கிராம சேவை உத்தியோகத்தர்கள் தமது கடமையின் நிமித்தம், பொதுமக்களோடு மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளவர்கள். பிரதேச நிர்வாகங்க்ளில் முக்கிய பங்கு வகிக்கின்றவர்கள். பிரதேச மற்றும் மாவட்ட செயலர்களுடன் பெருமளவில் தொடர்புடையவர்கள். எனவே, அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவது அவசியம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அண்மையில், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரச உத்தியோகத்தர்கள், அரசியல், இனமத வேறுபாடுகளின்றி பொதுமக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் - என்றும் மேலும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-9-ரி)

## கருத்தரங்கு

வவுனியா,ஓக.21

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்கல்வி கற்கவுள்ள வவுனியா மாவட்ட மாணவர்களுக்கு துறைகளைத் தெரிவுசெய்வது தொடர்பாக வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திச் சபையினால் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வவுனியா காமினி மகா வித்தியாலய•கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-24)

## மருத்துவர் பற்றாக்குறை

செம்பியன்பற்று,ஓக.21

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைகளில் வைத்தியர்கள், தாதியர்கள் பற்றாக்குறை இருந்து வருவதாகவும் -

இதனைச் சீர்செய்ய சுகாதார அமைச்சர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் - தெரிவிக்கப்படுகிறது. (ஒ-36)

## தியாகதீபம் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றோர்

செம்பியன்பற்று,ஓக.21

தமிழீழ சுகாதார சேவையின் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினால் கடந்த மாதம் 16ஆயிரத்து 307 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையின்கீழ் செயற்படும் நெடுந்தீவு, ஆழியவளை, பூநகரி, அடம்பன், அலம்பில், ஐயன்கன்குளம், மாங்குளம், கற்சிலைமடு, புளியங்குளம் நயினாமடு ஆகிய பத்து மருத்துவ நிலையங்களிலும் இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. (ஒ)

# பல்கலை. மாணவர் அனுமதியில் வவுனியா மாவட்டம் பாதிப்பு

## கல்வி அபிவிருத்திச்சபை தெரிவிப்பு

வவுனியா,ஓக.21

வவுனியா மாவட்டத்தில் கடந்த 81ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் அடிப்படையிலேயே பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள் என்று வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக தகுதியிருந்தும் பல மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 81 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போது 95 ஆயிரம் பேரே வவுனியாவில் இருந்தனர். 22 வருடங்களின் பின்னர் இப்பொழுது 2 லட்சத்து 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உள்ளனர்.

இவ்வாறான நிலையில் 81 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் மாணவர்கள் தொடர்ந்தும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படுவது மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தும் விடயம் எனவும் - சபை வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இதனால் மாவட்டத்தில் 16 தொடக்கம் 18 வரையான மாணவர்களே வருடந்தோறும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்படுவதுடன் பல மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## விக்கிரகம் திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.21

கொக்குவில் மேற்கு, ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலயத்தின் எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுப் போயுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யு.என்.எச்.சி.ஆர். வீடமைப்புத் திட்டத்தில் கட்டுமானப் பணிக்கு 1,150 ரூபா மட்டுமே

## வழங்கப்படுகிறது என்கிறார் கிராம அலுவலர்

தெல்லிப்பழை,ஓக.21

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னர் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தோருக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மேற்கொள்ளும் வீடமைப்புத் திட்டத்தில் கட்டுமானச் செலவுகளுக்காக ஆயிரத்து 150 ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வீடமைப்புத் திட்டத்தைக் கோணப்புலம் பகுதியில் மேற்கொண்டுவரும் கிராம அலுவலர் க.கலியுகவரதன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோணப்புலம் பகுதியில் வன்னியிலிருந்து மீளக்குடியமர வந்த வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்த 24 குடும்பங்களுக்கு தற்காலிக வீடமைப்புக்கு என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தலா 15 ஆயிரம் ரூபாவை வழங்கியது. இதில் 13 ஆயிரத்து 850 ரூபாவுக்கு வீடமைப்புக்கான கூரைத்தகடு, மரங்கள், ஆணிகள் உள்ளிட்ட கட்டுமானப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மிகுதி ஆயிரத்து 150 ரூபா மட்டுமே கட்டுமானச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமையில் இந்தத் தொகைக்குள் கட்டுமானச் செலவை சமாளிக்க முடியாது உள்ளதாக பயனாளிகள் கூறுகின்றனர்.

இத்திட்ட வரைபின்படி ஆறு தூண்களை நடுவதற்கும் முகடமைத்து 36 கூரைத்தகடுகளை பொருத்துவதற்கும் மட்டுமே இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அதற்கு மேலதிகமான கட்டுமானப் பணிகளை பயனாளிகள் தமது உழைப்பின் மூலமாகவோ அல்லது தமது சொந்த செலவிலோ ஈடுசெய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இவ்வீடமைப்புத் திட்டத்தில் நான்கு வீடுகளுக்கு ஒரு மலசலகூடம் என்ற அடிப்படையிலேயே அமைக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-150)

# உதயன்

## எது பயங்கரவாதம்? அதை இனங்காணுங்கள்!

சர்வதேச ரீதியில் தொடர்ந்து பெரும் சர்ச்சைக்கு உள்ளாகிவரும் இஸ்ரேலிலும் ஈராக்கிலும் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இரு பெரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் உலகையே உலுப்பியிருக்கின்றன.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் மக்கள் நலப் பணியில் ஈடுபட்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் மீது வெடிமருந்துகள் நிரம்பிய ட்ரக் ஒன்றைக் கொண்டு மோதி நடத்தப்பட்ட தாக்குதலில் இருபது பேர் வரை உயிரிழந்தனர்; நூறு பேர் வரை காயமடைந்துள்ளனர். ஐ.நா. அலுவலகம் அமைந்திருந்த மூன்று மாடிக் ஹோட்டல் கட்டடத்தின் ஒரு பகுதி அப்படியே தகர்ந்துள்ளது. ஈராக்கிற்கான ஐ.நாவின் விசேட அதிகாரியும் மூத்த அலுவலருமான சிரிகோ விரிய டி மேலோ காயங்களுடன் இடிபாடுகளுக்குள் நீண்டநேரம் சிக்கிக் கிடந்த பின்னர் உயிரிழந்திருக்கின்றார்.

இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் பஸ் ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிறுவர், சிறுமியர் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் இருபது பேர் பலியாகியிருக்கின்றனர்; நூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

அமெரிக்காவின் இராணுவ ஆக்கிரமிப்பால் பதவி கவிழ்க்கப்பட்ட ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு விசுவாசமான - அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளால் ஈராக்கில் தடைசெய்யப்பட்டிருக்கின்ற - பாத் கட்சியினர் பக்தாத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஜெருசலேம் தற்கொலைக் குண்டுத் தாக்குதலைப் பலஸ்தீன தீவிரவாத அமைப்புகளான இஸ்லாமிய ஜிஹாத் அல்லது ஹமாஸ் இயக்கம் ஆகியவற்றில் ஒன்று நடத்தியிருக்கக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

இரண்டு தாக்குதல்களிலுமே கொல்லப்பட்டவர்கள் அப்பாவிகள். யுத்தத்திலோ ஆயுதப் பிணக்கிலோ நேரடியாகச் சம்பந்தப்படாதவர்கள்.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரினால் வாழ்விழந்து நிற்கும் ஈராக்கிய மக்களுக்கு இழந்த வாழ்வை மீட்டுக் கொடுக்கும் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நா. அலுவலகம் மீது இந்தப் படுபயங்கரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமைதிப் பணிக்குப் புகழ்பெற்ற ஐ.நாவில் இணைந்து, சமாதான வழியில் சேவையாற்ற தம்மைப் பிணைத்துக்கொண்ட - பல்வேறு நாடுகளையும் சேர்ந்த - அலுவலர்கள், நிபுணர்கள் இத்தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அதேபோன்று ஜெருசலேத்தில் நடந்த குண்டுத் தாக்குதலில் பெரும்பாலும் மத வழிபாடுகளுக்குச் சென்று விட்டு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்த பொதுமக்களே பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அப்பாவிகள் மீதும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்ற முன்வந்த அமைதிப் பணியாளர்கள் மீதும் நடத்தப்பட்ட இத்தகைய தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கவை. இத்தாக்குதல்களுக்கு எதிரான கண்டனங்கள் வழமைபோல உலகின் மூலைமுடுக்கு எங்கிருந்தும் பறந்துவந்து கொண்டிருக்கின்றன; இனியும் தொடர்ந்து வரும்.

ஆனால், இத்தகைய தாக்குதல்களுக்குக் காரணமான அடிப்படையை - பின்னணியை - சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாத போக்கும்கூட தொடர்ந்தவண்ணமே இருக்கும்.

மனித குலத்துக்குப் பேரழிவு தரும் ஆயுதங்களை சதாம் ஹுசைன் வைத்திருக்கின்றார், தயாரிக்கிறார் என்ற பொய்க் குற்றச்சாட்டுக்களை - 'கப்ஸா'க்களை - அவிழ்த்து விட்டுவிட்டு, இறைமையுள்ள ஒரு நாட்டின் மீது - அதுவும் ஐ.நா. அனுமதிதர மறுத்தநிலையில் - அமெரிக்காவும் பிரிட்டனும் ஆக்கிரமிப்பு நடத்தியதைப் 'பெரும் பயங்கரவாதமாக' கண்டித்து அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கத்தவறிய ஐ.நா. அதன் பின்னர் அந்த ஆக்கிரமிப்புப் படைக்கு ஒத்து ஊத ஈராக் சென்றிருந்தது.

பலஸ்தீனரின் பிரதேசத்தை ஆக்கிரமிப்பால் பறித்துக் கொண்டதன் மூலம் பயங்கரவாதம் புரிந்த இஸ்ரேல், பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அப்பாவி பலஸ்தீன மக்கள் மீது நடத்தும் 'பயங்கரவாதத்தை' உலகம் கண்டுகொள்வதில்லை; அலட்டிக் கொள்ளமாட்டாது.

செவ்வாய்க்கிழமை நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து பலஸ்தீனத்துடனான சகல சமாதான நடவடிக்கைகளையும் இடைநிறுத்தியதாக அறிவித்துள்ள இஸ்ரேல், வழமைபோல பதில் தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தயாராகி வருகின்றது. 'பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல்' என்ற போர்வையில் பலஸ்தீன மக்கள்மீது நடத்தப்படப் போகும் இந்த பேரழிவுத் தாக்குதலை சர்வதேச உலகம் கைகட்டிப் பார்த்திருக்கும் - வழமைபோல.

உண்மையான 'பயங்கரவாதம்' எது, பயங்கரவாதத்துக்கு எதிரான 'எதிர்ப் பயங்கரவாதம்' எது என்பதை சர்வதேச உலகம் சரியாக அடையாளங்கண்டு பிரகடனப்படுத்தத் தவறியிருப்பதே பயங்கரவாதம் என்ற பெயரில் இத்தகைய கொடூரங்கள் தொடரக் காரணம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகின் கண்டனமும் போக்கும் ஒரு பக்கச்சார்பானதாக இருக்கக்கூடாது. அந்நிலை வருமானால் - பக்கச்சார்பின்றி பயங்கரவாதிகளும் உலகின்முன் தோலுரித்துக் காட்டப்படுவார்களேயானால் - பயங்கரவாதத்தை அழிப்பதும் இல்லாதொழிப்பதும் சாத்தியமாகும்.

# மீனவர்கள் நிவாரணத்துக்கு அதிக விலையில் தரமற்ற அரிசி

## வடமராட்சி வடக்கில் அதிருப்தி

வடமராட்சி,ஓக.21

வடமராட்சி வடக்குப்பகுதியில் மீனவர் நிவாரணத்துக்கு மிகமோசமாகப் பழுதடைந்த அரிசி கூடுதல் விலையில் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மீனவர் நிவாரணப்பொருள்களை தற்போது வழங்கி வருகிறது. மீனவர் நிவாரணத்துக்கு வழங்கப்படும் தரம் குறைந்த அரிசியின் விலை கிலோ 31ரூபா 34சதமாகும். ஆனால் இதே சங்கத்தினால் சமுர்த்தி நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசியின் விலை கிலோ 28 ரூபா 50 சதமாகும். அதேசமயம் இச்சங்கத்தினால் சில்லறைவிலைக்கு, தாராளமாக விற்பனை செய்யப்படும் அரிசியின் விலை கிலோ 25 ரூபாவாகும்.

மீனவர் நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசியைவிட சமுர்த்தி நிவாரணம், சில்லறை விநியோகம் ஆகியவற்றுக்கென வழங்கப்படும் அரிசி தரமானதாகும்.

தரமான அரிசி கிலோ 25ரூபாவாகவும் 28ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்படும் போது மீனவர் நிவாரணத்துக்கு தரமற்ற அரிசியை வழங்குவதுடன் அதன் விலையையும் அதிகரித்து விற்பனை செய்யப்படுவது குறித்து மீனவர் சமூகமட்டத்தில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. (ஒ-173)

# வடக்கு - கிழக்கில் கண்ணிவெடி அகற்ற ரூ.272 கோடி தேவை!

வவுனியா,ஓக.21

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளில் இன்னமும் 14லட்சம் கண்ணிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது. இவற்றை அகற்ற 272கோடி ரூபா தேவையாக உள்ளது.

வவுனியா செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற செயலமர்வு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நடந்த இந்தச் சந்திப்பில் கண்ணி அகற்றும் விசேட நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றும் கலந்துகொண்டது.

இந்தக் கண்ணிகள் அகற்றப்படாததால் மக்கள் மீளக்குடியமர்வும் தடைப்பட்டுள்ளது என்றும் இச்செயலமர்வில் சுட்டிக் காட்டப்பட்டது.

கண்ணி அகற்றும் பணிக்கு ஜப்பான் 32கோடி ரூபாவையும் சுவிஸ் 45கோடி ரூபாவையும் நெதர்லாந்து 30கோடி ரூபாவையும் தாய்லாந்து 12கோடி ரூபாவையும் வழங்க முன்வந்துள்ளதாகவும் இச்செயலமர்வில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-164)

# நல்லூர் ஆலயச் சுற்றாடலில் அ.அட்டைகள் கண்டெடுப்பு!

## உற்சவப் பணிமனையில் உள்ளன

யாழ்ப்பாணம்,ஓக.21

நல்லூர் ஆலயச்சூழலில் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு ஆலயமருகே இந்துவிடுதியில் இயங்கும் உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் -

உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என்றும் - உற்சவகால பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு உரியவர்களின் பெயர்கள் வருமாறு:

**விசேட அடையாள அட்டைகள்:**

ஆனந்தவடிவேல் வசந்தாதேவி (கரவெட்டி), தம்பையா நாகபரமேஸ்வரி (வேலணை), இராமலிங்கம் இராஜினி (தம்பாட்டி).

**தேசிய அடையாள அட்டை**

ஜெயதாஸ் ஜெயந்தினி (சாவகச்சேரி) இவற்றைத் தவிர ஸ்ரீகாந்தன் சரஸ்வதி (புலோப்பளை) என்பவரின் போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவின் நிரந்தரப் பயண அட்டையும், வீரசிங்கம் ஜெயந்தி (முள்ளியவளை) என்பவரின் தமிழீழ வைப்பகக் கணக்குப்புத்தகமும் கண்டெடுக்கப்பட்டு பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

**நாளை**

ஆவணி 5
வெள்ளிக்கிழமை
(22.08.2003)
திதி : தசமி
நள்ளிரவு 11.54 வரை
நட்சத்திரம: மிருகசீரிடம்
பின்னிரவு 2.05 வரை
சுபநேரம் : 6.05 - 7.35
ராகுகாலம்: 10.35-12.05
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அதியாயமாக அடைந்த பொருள் மற்றப் பொருள்களையும் அழித்துவிடும்.

# கண்ணிவெடி அகற்றுவதற்கு கிளிநொச்சியில் பயிற்சி

## தாய்லாந்து நிபுணர்கள் வழங்குவர்

கிளிநொச்சி,ஓக.21

வன்னிப் பெருநிலப்பரப்பில் நவீன முறைப்படி கண்ணி அகற்றும் முறை குறித்து தாய்லாந்து கண்ணி அகற்றும் நிபுணர்கள் நாளைமுதல் கிளிநொச்சியில் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

கிளிநொச்சி வரும் இந்த நிபுணர் குழு சில வாரங்கள் அங்கு தங்கி நின்று பயிற்சிகளை வழங்கும்.

மனிதநேய கண்ணி அகற்றும் குழுவினால் தெரிவு செய்யப்படும் தொண்டர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும்.

கடந்த வாரம் வன்னி வந்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களின் போது இந்தப் பயிற்சிகளை வழங்க தாய்லாந்து தூதர் இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஒ-3)

# நீதி நிர்வாகத்துறையின் 10ஆம் ஆண்டுநிறைவு இன்று

தமிழீழ நீதி நிர்வாகத்துறை இன்று வியாழக்கிழமை 10 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது.

கடந்த 10 ஆண்டு காலமாக தமிழ் மக்களின் நீதி நிர்வாக கட்டமைப்புகளை நெறிப்படுத்தியும் மக்களின் பல்வேறு பிரச்சினைகளைக் கையாண்டும் தமிழீழ நீதி நிர்வாகத்துறை சிறப்பாகச் செயற்பட்டுவருகிறது.

தமிழீழ நீதி நிர்வாகத்துறை தனது கட்டமைப்பை தற்போது தமிழர் தாயகப் பகுதியெங்கும் விரிவுபடுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9-5)

## வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட

# கிராம அலுவலர்களுக்கு ஒருநாள் சம்பளம் வெட்டு

நல்லூர்,ஓக.21

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட கிராம அலுவலர்களின் ஒரு நாள் சம்பளம் இம்மாதம் நிறுத்தப்பட உள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கிராம அலுவலர் ஒருவர் இனம்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டு காணாமல் போயிருந்தார். அவரை மீட்பதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்தும்படி கோரி கிராம அலுவலர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதற்காகவே இச்சம்பள வெட்டு செய்யப்பட்டுளளதாக தெரிவிக்கப்படுகிறது.

சங்கானை பிரதேச செயலர் அலுவலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர் ஒருவர் வீட்டில் இருந்து இனம்தெரியாதவர்களினால் கடத்தி செல்லப்பட்ட மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட கிராம அலுவலர் சங்கம் போராட்டத்தை நடத்தியது.

ஆனால் தற்போது கிராம அலுவலர்களின் ஒரு நாள் சம்பளம் வெட்டப்படுவதாக செயலகம் அறிவித்துள்ள போதிலும சங்கம் நடவடிக்கையெடுக்கவில்லையென கிராம அலுவலர்கள் தரப்பில் குறைகூறப்படுகிறது.

## பாதுகாப்பு வலயம் காரணமாக

# யூனியன் கல்லூரி சிற்றூழியர் பணிக்குச் செல்வதில் சிரமம்!

தெல்லிப்பழை,ஓக.21

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் சிற்றூழியர் ஒருவர் விடுமுறைக் காலமான தற்போது தனது கடமைக்காக சென்ற வேளை குறுகிய நேரம் மட்டும் உள் அனுமதிக்கப்பட்டு படையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இயங்கி வரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தற்போது விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது. எனினும் இப்பாடசாலையின் சிற்றூழியர்கள் கடமைக்கு சென்றுவர வேண்டியது அவசியமாகும்.

சமீபத்தில் இவ்வாறு கடமைக்காக சென்ற யூனியன் கல்லூரியின் விஞ்ஞானகூடப் பணியாளர் இராணுவவீரர் ஒருவருடன் பாடசாலை வரை அனுமதிக்கப்பட்டதாகவும் -

ஆனால் சிறிது நேரத்தில் அப்பணியாளர் வெளியேறுமாறு கோரி திருப்பி அனுப்பப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இவ்வுயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் கடமையாற்றும் அரச பணியாளர்கள் இராணுவப் புலனாய்வுப்பிரிவின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்கென விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்வதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் இப்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மண்ணெண்ணெய் எடுத்துச் சென்ற பிரதேச சபை ஊழியர்கள் இருவர் உள்ளனுமதிக்கப்படாது திருப்பியனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. (ஒ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பனை
குருத்தோலைச் சார்வு
தேவை.
தொடர்பு கொள்ளவும்.
**அண்ணா பாம்**
இணுவில்.
(25-21-13-18) (c/29631)



## தேவை

தையல்வேலையில் அனுபவம்
உள்ள ஆண்கள் தேவை.
உடன்
தொடர்புகொள்ளவும்.
**குமார் தையல் அகம்**
K.K.S. வீதி,
தாவடி, கொக்குவில்.
T.P : 0777 111486
(25-21-19-11) (21607)


## ஐந்து சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையச் சென்ற சிறுமியை வயதுக் கட்டுப்பாடு காரணமாக தீவகக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், சிறுமியின் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளார்.

வேலணை வங்களாவடியைச் சேர்ந்த குறிப்பிட்ட சிறுமி, அவரது தாயாரிடம் கடந்த திங்கள் ஒப்படைக்கப்பட்டார். இதேபோன்று சிறுமி ஒருத்தி உட்பட இயக்கத்தில் சேரவந்த மேலும் 4 பேர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் பட்டனர். மட்டக்களப்பில் பட்டிருப்பு கோட்ட அரசியல்துறை அலுவலகத்தில வைத்து மூன்று சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து சிறுமி ஒருத்தியும் - நேற்று முன்தினம் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ-9-5)


## இணைந்த கணிதம்

Group, Personal Class
*Paper Class
*Theory Class
(ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்)

M. SRI (B.Sc.)
No.74, Palaly Road,
Thirunelvely.
(21580) (26)


## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம்-2003

### கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள்அமைத்தல் தொடர்பான

# அறிவித்தல்

மேற்படி உற்சவ காலத்தில் எமது சபையின் தெல்லிப் பழை உப அலுவலக எல்லைக்குள் கடைகள், துவிச் சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் அமைத்து நடத்த விரும்புவோர் அவைகள் அமையவிருக்கும் இடங்களில் காணி உரிமையாளர்களின் எழுத்துமூலமான அனுமதியுடன் எமக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தங்களால் சமர்ப்பிக்கப்படும் வியாபார உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் அதன் தன்மையைப் பொறுத்து சுகாதார வைத்திய அதிகாரியின் விதப்புரையும் பெறப்பட்ட பின்னரே வியாபாரம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

பொ. வைரமுத்து,
செயலாளர்,
*வலி. வடக்கு பிரதேச சபை.*

வலி. வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.
15-08-2003 (C/29636) (21-13-18)


## இதோ!

*சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!*
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

*சித்தாரா* **பனங் கற்கண்டு** இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-28665)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு
13 - 06 - 1933

உதிர்வு
24 - 07 - 2003

அமரர்

### பிள்ளையாகுட்டி இராசரட்ணம்

திருப்பூர், மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இராசரட்ணம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 23.08.2003 சனிக்கிழமை காலை நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இ. வெற்றிக்கொடி
(மகன்)

*கல்லூரி வீதி,*
*பருத்தித்துறை.* (C/29637) (26-21-18-13)

## நெஞ்சம் மறவாத நினைவஞ்சலி

### முதலாம் ஆண்டு



மண்ணில்
26 - 07 - 1926

விண்ணில்
01 - 09 - 2002

கைதையூர்
**திருமதி அரியமலர் வேலாயுதர்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்)

### இரண்டாம் ஆண்டு



மண்ணில்
18 - 05 - 1928

விண்ணில்
01 - 07 - 2001

கைதையூர்
**அமரர் இராமலிங்கம் வேலாயுதர்**
(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர், கைதடி நாவற்குழி கிராமசபைத் தலைவர்)

திதி: 21-08-2003 வியாழக்கிழமை

புகழ் பூத்த அன்னை அப்பனாய் அகிலத்தில்
அகல் விளக்காய் எம்மை அரவணைத்து ஆதரித்து
புகல் தந்தனம் பெம்மானே உம் புண்ணியத்தால்
நாமும் நம்மக்களும் மற்றும் உற்றார், மற்றார் உறவினர்
சேமநலமுடன் சிறப்புற வாழ வானத்தில் தாரகையாய்
கோலமாய் உலாவி உம் குளிர்க்கரம் தந்து
மேலவே உய்ந்திட வழிசெயு எம் தெய்வங்காள்
முப்போதும் உம்மை எம் அகக் கோயிலில் இருத்தி
கைப்போது மலர்தூவி காதலித்து இறைஞ்சுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

'துவாரகை'
கைதடி மேற்கு, கைதடி. (21605) (21-13-18)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24 - 12 - 1924

மறைவு
12 - 08 - 2001

திருமதி

### அன்னம்மா சுப்பிரமணியம்

உடலால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உள்ளத்தில் எம்மோடு என்றும் வாழ்ந்து
கொண்டிருக்கும் எம் இதயத் தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு ஆயிற்றே அம்மா நித்தமும்
உங்கள் நினைவில் என்றும் ஏங்கித்
தவிக்கிறோம் என்றென்றும் எங்கள் துயர்
ஆறாது எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
இருந்தெம்மை வாழவைத்தீர்கள்! இன்றும்
எம் உள்ளத்தில் நீங்கா இடம்பிடித்துள்ளீர்கள்!
எம் இனிய இதயத்தெய்வத்துக்கு
கண்ணீரைக் காணிக்கையாக்கி எம்
இதயத்தில் உங்கள் ஆத்மாசாந்தி
அடைய பிரார்த்திக்கிறோம்.

தகவல்:
S.ஞானசேகரம் (மகன் - C.T.B.),
104/5, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(21618) (26-21-18-13)

அன்பு மக்கள், சகோதரங்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

## 14ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ்**
(ரவி)



அமரர்
**கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன்**
(கண்ணன்)



அமரர்
**நாகமணி தில்லைநாதன்**
(நாதன்)

ஆண்டவன் படைப்பில்:
14-01-1958 22-03-1962 30-03-1959

அந்நியன் அழிப்பில்: 21.08.1989
திதி: 15-09-2003

வித்தாகி எங்கள் சொத்தாகி முத்தாகி வந்த எங்கள் செல்வங்களே!
பாதி வழியில் எங்களைப் பரிதவிக்க விட்டுவிட்டு எங்குதான் சென்றீரோ
உடலிலே உறுதியில்லை உள்ளத்தில் தெளிவில்லை, மனதிலே அமைதியில்லை
எம்முறவே இன்றோடு பதினான்கு ஆண்டன்றோ
எங்கள் ரவி, கண்ணன், நாதனுக்கு என்றும் எம் அஞ்சலிகள்!

- குடும்பத்தினர்.

பருத்தித்துறை. (21527) (26-21-13-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதில் இராணுவம் ஈடுபடும்

## மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு



கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் அங்கு விசேட அதிரடிப் படையினரும் மேலதிக இராணுவத்தினரும் அனுப்பப்படுவர். அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொலீஸாரும் அங்கு மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படுவர்.

பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படுவதற்கென முஸ்லிம் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் மூவர் நியமிக்கப்படுவர். இவர்கள் மூவரும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இருந்து இணைப்பதிகாரிகளாகக் கடமையாற்றுவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

கடந்த திங்கள் இரவு பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலீஸ் மா அதிபர் ஆகியோருடன் ஸ்ரீல.மு.காங்கிரஸ் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுக்களின்போதே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்று அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுவரும் கொலைகளுக்கு அரசும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் பொறுப்பேற்கவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் குற்றஞ்சுமத்தியதை அமைச்சர் ஹக்கீம் முற்றாக நிராகரித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

அரசியல் நோக்கத்திற்காகவும் அமைச்சராகிவிடலாம் என்ற ஆசையிலும் எதையும் கூறிவிடலாம். ஆனால், எமக்குப் பல பொறுப்புகள் இருக்கின்றன. பொறுப்பற்ற முறையில் பேசிவிட முடியாது. எந்த ஒரு பிரச்சினையையும் பேசித்தீர்க்க முடியும். சமாதானப் பேச்சுக்களில் அரசுக்கும் புலிகளுக்கும் முக்கியத்துவம் இருப்பதுபோல் முஸ்லிம்களின் பங்களிப்பும் அவசியம்.

நாம் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் அக்கறை உடையவர்கள். அதே வேளை, முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயங்களில் நாம் அக்கறையுடன் செயற்படவேண்டும். இது அவசியமும் அத்தியாவசியமுமான விடயம்.

அண்மையில் இடம்பெற்ற கிழக்கு மாகாணப் படுகொலைகள் தொடர்பாகப் பிரதமருடனும் மற்றும் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர்களுடனும் நான் பேச்சுக்களை நடத்தினேன்.

அதன் பிரதி பலனாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பொறுப்பான இணைப்பதிகாரிகளாக மூன்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்படும். விசேட அதிரடிப்படையினரும் மேலதிக இராணுவத்தினரும் அங்கு கடமையில் அமர்த்தப்படுவர்.

இதனால், நாம் ஆயுதப் படையினருக்குத் துணை போகிறவர்கள் என்றோ,சமாதானப் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்கள் என்றோ புலிகள் எம்மைக் கருதிவிடக்கூடாது.

முஸ்லிம் மக்களை ஆயுதங்களைக் காட்டி அடக்கி ஆளலாம் என்றோ அல்லது அடிமைப்படுத்திவிடலாம் என்றோ புலிகள் கருதினால் அதற்கு இடமளிக்கமுடியாது. இதனைத் தடுக்க எம்மால் முடிந்த சகலதையும் செய்வோம் - இவ்வாறு அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

கண்காணிப்புக் குழுவினரின் நடவடிக்கை தொடர்பாகவும் அமைச்சர் அதிருப்தி தெரிவித்தார். எல்லா விடயங்களுக்கும் அவர்கள் ஆணித்தரமான - நேரில்கண்ட - காட்சிகளை எதிர்பார்க்கிறனர். அவர்களும் தங்களுடைய வரைமுறைகளுக்கு உட்பட்டே செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். மேலும் எந்த ஒரு சம்பவம் இடம்பெற்றாலும் அதற்குக் காரணமானவர்கள் கண்டு பிடிக்கப்படாவிட்டால் அதற்குரிய பழியை புலிகள் மீது போட்டுவிட முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# மட்டு-அம்பாறை முஸ்லிம்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

## நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் தீர்மானம்

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதென நேற்றுமுன்தினம் அம்பாறையில் நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும கிராமங்களில் இதுவரை, பாதுகாப்பு வழங்கிய பொலீஸாருக்கும், பொலீஸ் விசேட அதிரடிப்படையினருக்கும் மேலதிகமாக இராணுவத்தினரையும் ஈடுபடுத்த கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது என்று தகவல்கள் கூறுகின்றன.

அம்பாறை மாவட்டத்தை வலயங்களாகப் பிரித்து ஒவ்வொரு வலயத்திலும் இராணுவத்தினரையும், அதிரடிப்படையினரையும் சேவையில் ஈடுபடுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்படி சம்மாந்துறை முதல் மல்வத்தை வரையிலான வலயத்திலும், மல்வத்தை முதல் சவளக்கடை வரையிலான வலயத்திலும், சேனவட்டை அடங்கிய வலயத்திலும் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். ஏனைய முஸ்லிம் வலயங்களில் பொலீஸ் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்படுவர்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் நகரங்களினதும் கரையோரப் பிரதேச வலயத்தில் பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டிருப்போரினதும் பாதுகாப்புக்கும் இராணுவம் பயன்படுத்தப்படும் - இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ஒ)

# கிழக்கில் அவசர அவசரமாக பொலீஸுக்கு ஆள்சேர்ப்பு

கிழக்கில் அவசர அவசரமாகப் பொலீஸுக்கு ஆள்சேர்ப்பு நடத்த அரசு முடிவு செய்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் விடுத்த அவசர அறிவிப்பின் அடிப்படையில், அடுத்த நான்கு நாள்களுக்குள் ஐம்பது சப் இன்ஸ்பெக்டர்களையும் ஐந்நூறு கான்ஸ்டபிள்களையும் திரட்ட முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏழு பொலீஸ் நிலையங்களில் நடைபெறவுள்ளன என்று பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடலின் பின்பே இந்த அவசர ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரியவருகிறது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இந்தப் பரீட்சைகள் மூலம் தெரிவுசெய்யப்படுவர் என்றும் இவர்களில் முஸ்லிம் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக முஸ்லிம் பிரதி பொலீஸ்மா அதிபர்கள் மூவர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையிலே இந்த ஆள்சேர்ப்பு நடவடிக்கைக்கு ஆயத்தம் செய்யப்படுகிறது.

நேர்முகத் தேர்வுகள் அக்கரைப்பற்று, அம்பாறை, கல்முனை, பொத்துவில், மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர் ஆகிய பொலஸ் நிலையங்களில் காலை 8 மணிமுதல் மாலை 5மணிவரை குறிப்பிட்ட தினங்களில் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களை மேற்குறிப்பிட்ட பொலீஸ் நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு மாகாண அமைச்சு நிதி உதவி

தென்மராட்சி,ஓக.21

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளில் புதிய வகுப்பறைத் தொகுதிகள் அமைக்க ஐந்து லட்சம் ரூபாவினை மாகாண கல்வி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளிலேயே புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்ய 4 லட்சத்து [illegible] ரூபாவினையும் மாகாணக் கல்வி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.21

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் சுகன்யா சிவானந்தத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - எம்.றதீஸ்குமார், மிருதங்கம்- வி.ரமணன், முகர்சிங்- கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஒ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு 'திருவாதவூரர்' பற்றி சி. வை.நித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.(ஒ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை [illegible] என்னும் பொருளில் சிவத்திரு. எம். [illegible] சொற்பொழிவாற்றுவார். (ஒ-10)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பத்தொன்பதாம் திருவிழா



## நல்லூரானை நாள்தோறும் நாடு

நல்லூரான் பாதத்தை நாடோறும் நாடினால்
எல்லையில்லா பேரின்பம் ஈடேறும் - எல்லீரும்
கந்தன் திருப்புகழை காலமெல்லாம் உந்தனது
சிந்தையிலே வைப்பீர் சிறந்து.

- வே.இராமர் - கிளிநொச்சி.

## அஞ்சாமல் நாம் வாழ வரம்தா!

நல்லைநகர் நாதனே நாயகா
நம்மையெல்லாம் காத்திடுவாய் நாயகா
அல்லல்கள் தீர்த்து வைப்பாய் அப்பனே
அமைதியான வாழ்வு தாராய் அழகனே!

குன்று தோறும் ஆடுகின்ற குமரனே
குறைகளையே ஒழித்திடுவாய் குமரனே
நன்றே நாம் வாழ்ந்திடவே நாயகா
நமக்கருள் புரிந்திடுவாய் நாயகா!

வஞ்சகர்கள் செய்திடும் கொடுமையால்
வாடித்துடிக்கிறோம் தேவனே
அஞ்சாமல் நாம் வாழும் நிலை யொன்று
அளித்திட வேண்டும் எங்கள் அப்பனே.

- சுந்தரி.

## கந்தனை வந்தனை செய்!

நல்லை நகர்க்கோடி வாரும் - சிவ
நாதன் திருப்பதி சேரும்
தொல்லை வினைகளைத் தீரும் - அங்கு
தோன்றும் சுகங்களைப் பாரும்!

காவடி தூக்கிநின் றாடும் - நல்லைக்
கந்தன் புகழ்சொல்லிப் பாடும்
சேவடிக் கீழ்த்துயர் ஓடும் - எங்கள்
தேவைகள் யாவுங்கை கூடும்!

கந்தனைப் பாடிக்கொண் டாடு - அவன்
கால்களைச் சென்னியில் சூடு
வந்தனை செய் உணர் வோடு - குகன்
வந்தருள் வான்படை யோடு!

- வ.சின்னப்பா - தனங்களப்பு.

## கோல மஞ்ஞை வாகனனே!

கல்லான என் நெஞ்சைக்
கசிந்துருகச் செய்தாயே
முத்தமிழால் மாலை சூட்ட
முன்னின்றருள் சுரப்பாய்
விக்கல் வந்து விடாய் தீர்க்க
விந்தை தனைப் புரிந்தவா
பாரினிலே நற் சமாதானம்
பாய்ந்து வரச் செய்திடப்பா

கோல மஞ்ஞை வாகனனே
கோடித் துன்பம் தீருமையா
குக்குடக் கொடியேந்தி
இக்கணமே வந்திடாயோ
வேலைக் கையில் தாங்கியவா
வேண்டும் வரம் நல்கிடவா
நல்லூரில் நீ இருந்தாலும்
நாடெல்லாம் உன் சரண் அல்லோ.

- கைதடியூர் பரஞ்சோதி.

## வினைதீர்க்கும் நல்லூரா!

வல்லமை கொள் குருபரனின் வாய்பேச முடியாத
வாதையினைத் தீர்த்து வைத்து
வாழ்த்துமவர் நெஞ்சிலும் வாக்கிலும் செந்தமிழின்
வடிவத்தை எழுதி வைத்தாய்
மலர்தேடித் தாவுகிற வண்டெல்லாம் நின்பாத
மலர் நோக்கித் தாவுகின்ற
வளமான தென்பழனி மலைமீதிற் பண்டார
வடிவேந்தும் தண்டபாணியே!
வெல்லுதமிழ் பாட்டாலுன் வரிவான புகழ்பாடி
வியந்திங்கு போற்று கின்றோம்
விடியாத பொழுதாகி முடியாத கதையாகி
விழி சோரும் எங்கள் முன்னே
வேலோடும் மயிலோடும் விரிசேவற் கொடியோடும்
விருப்போடு வந்திருந்து
விழிகொண்ட பயனாகி வழி கண்ட துணையாகி
வினைதீர்க்க நல்லூரில் வரவேண்டுமே!

சைவப்புலவர் செ. பரமநாதன்
மண்டைதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Yamaha Mate 90 யப்பான் என்ஜின் பொருத்தப்பட்ட சிறிய குடும்பத்திற்கேற்ற அழகான ஓட்டோ அமைப்பிலான முச்சக்கர வண்டி ஒன்று (Motor Tri Cycle) யாழ். மண்ணில் முதன் முறையாக அறிமுகம் செய்யப பட்டது விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.றொய்ஸ், இல.69, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (21633)

## வாடகைக்கு

சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் மேலதிக பயற்சிபெற மோட்டார் வாகனம் வாடகைக்கு விடப படும். நேரில் தொடர்பு கொள்ளவும். N.றுபேந்திரன், இல.73, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (பிறிமியர் பேக்கரி). (21628)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பிரான்ஸில் வசிக்கும், பொன சரில் அழைக்கும் தகைமையுடைய 46 வயது, 5'6" உயரம், பூச நட்சத்திரம் முதலாம் பாதம் 8இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு 42 வயதுக்குட்பட்ட மணமகளைப் பெற்றோ எதிர்பார்க்கின் றனர். தொடர்பு: திருமதி ம.பாலசுப் பிரமணியம், இல.79, சிவன்கோயிலடி, திருநெல்வேலி. (குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். தரகர் தேவை யில்லை). (21637)

## தவறிவிட்டது

சரஸ்வதி வேலாயுதம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 566291240V) நல்லூர் உற்சவத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவா கள் த.வேலாயுதம் சட்டத்தரணி, உப்புமடம் சந்தி, கோண்டாவில் என் னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (21640)

பருத்தித்துறையில் வசிக்கின்ற குமரேஸ்வரன் ஜெனற்ராஜினி என்பவ ருடைய கிராமிய வங்கி பளை கணக் குப் புத்தகமும், செல்லத்துரை கும ரேஸ்வரனின் குடும்ப நிவாரண அட் டையும் (ஓட்டைக்காட்), சின்னத்தம்பி செல்லத்துரையின் குடும்ப நிவாரண அட்டையும், (ஓட்டைக்காட்) கொடிகா மத்திலிருந்து வானில் பருத்தித் துறைக்கு வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அல்வாய் திருத் தணி தொலைத் தொடர்பு (T.P. 070 212365) நிலையத்தில் ஒப்படைத துதவவும். தகுந்த சன்மானம் வழங் கப்படும். (21619)

யா/தேவரையாளி இந்துக்கல்லூரிக கும் வதிரிச்சந்திக்கும் இடையில் 17-08-2003 அன்று 11/2 பவுண் சங் கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் தயவுசெய்து கீழுள்ள முகவரி யில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங் கப்படும். சு.சதாசிவம் (வாழைப்பழம்) 'கிறிஸ்ரீனா" வதிரி கலா நிலையம், நெல்லியடி வடக்கு. (21650)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. விலை ரூபா 45/-. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21616)

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில் 4 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

(மு.ப. 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை)

தொடர்பு:

**திரு.இ.ஜெயக்குமார்,**
இல.85, கண்டி வீதி, சாவகச்சேரி.

(15-19-21) (21581)

## நன்றி நவில்கின்றோம்

சுப்பிரமணியன் சோடாக்கம்பனி மற்றும் ராஜு ஸ்ரோர்ஸ்
உரிமையாளரான
பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற
**சி.வே.சிவசுப்பிரமணியம்**
அவர்களின் அன்பு மனைவியான

### திருமதி சிவசுப்பிரமணியம் கோசலையம்மா

அவர்கள் கடந்த 14-08-2003 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார். அவர்களது மறைவு குறித்து எமக்கு உடன்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் 16.08.2003 சனிக்கிழமை நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது தம்மாலான உதவி ஒத்தாசைகள் புரிந்து அந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் பத்திரிகை, தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்குப் பல்வேறு உதவிகள் புரிந்த அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சுப்பிரமணியன் சோடாக்கம்பனி,
வல்வெட்டித்துறை.
ராஜு ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(சி-29654)(21-15-19)

## 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம
06 - 02 - 1972



மறைவு
12 - 07 - 2003

### அமரர் கிருஸ்ணர் சுகுமார்

கடந்த 12.07.2003 அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகன் கிருஸ்ணர் சுகுமார் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்தியின் பொருட்டு பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.*
(21648) (25-21-15-19)

உ

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 05ஆம் நாள் (22.08.2003) வெள்ளிக்கிழமை பகல் 9.05 மணிமுதல் 10.14 (புதிய நேரம்) மணி வரையுள்ள தசமி திதியும், சித்தயோகமும் துலா லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில,

எமது சிரேஷ்ட புத்திரி திருவளர் செல்வி
**சுபைதா**

அவர்களுக்கு பூப்புனித நீராட்டு விழா எமது இல்லத்தில் நடத்த இறையருள் துணைகொண்டு நிற்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து மங்களச் செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
**திரு.சி.ஆனந்தராசா குடும்பத்தினர்**
"சுபைஸ்தான்"
உத்திராவத்தை,
புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.

ஜெயந்தி இன்டஸ்றீஸ்,
மந்திகை.
(21649) (25-21-15-19)

கல்வித் திணைக்களம் அனுப்பும்

# தமிழ் ஆசிரியருக்கான கடிதங்கள் தொடர்ந்தும் சிங்கள மொழியிலாம்

கொழும்பு,ஓக.21

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடமைபுரியும் தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு கல்வித் திணைக்களம் மற்றும் அது சார்ந்த அலுவலகங்களிலிருந்து அனுப் பப்படும் கடிதங்கள், சிங்கள மொழி யிலேயே தொடர்ந்தும் அனுப்பப்படு கின்றன. இதனால் அவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள் என்று இலங்கை தமிழாசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித் துள்ளார். கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

தமிழ்மொழி மூல ஆசிரியர்களுடனான உத்தியோகபூர்வத் தொடர்புகள் தமிழ்மொழியில் நடைபெறுவதற்கு தான் விரைவில் நடவடிக்கை எடுக்க வுள்ளதாக கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு எமது சங்கத் திற்கு உறுதி அளித்திருந்தார். ஆனால், இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் மகாசிவம் மேலும் தெரி வித்ததாக அச்செய்தியில் குறிப் பிடப்பட்டுள்ளது. (ஒ-9)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்

### திருமதி ஸ்ரீதரன் புஸ்பாதேவி

(21651)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**-சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை.**

பரமேஸ்வராச்சந்தி.
திருநெல்வேலி.
(21-15-19)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவக்கொழுந்து வீரசிங்கம்

நல்லூரைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து வீரசிங்கம் அவர்கள் 17.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் (செனித் வாச் கம்பனி உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயகௌரி, ஜெயமலர், ஜெயராணி, ஜெயசிங்கம், ஜெயசுஸ்வரி, ஜெயக்குமார், ஜெயராஜன், ஜெயபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் செந்தில்வேல்ராஜா, சந்திரசேகரன், ராஜேந்திரன், கலாவதி, பத்மநாதன், ஜெயராணி, சுபோஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனன், ஜனந்தினி, ஜனார்த்தன், அமிர்தா, டிலன், ஷரண்யா, சிந்துஜா, சஞ்சீவ், நிவேதன், உபாசனா, உபாசன், உபனயா, நிரோஜன், அஸ்வினி, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.373/3, நாவலர் வீதி,*
*நல்லூர்.*
*T.P. 021 - 222 6567*
*077 - 6115453*
*0777 - 243814*

தகவல்:
வீ.ஜெயசிங்கம்.

(21645) (26-15-19)

### திருமதி சீனிவாசகம் பார்வதி

சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீனிவாசகம் பார்வதி நேற்று (20.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் ஸ்தபதியாரின் அன்பு மனைவியும் இலட்சுமி, சுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராமலிங்கம் ஆச்சாரி மற்றும் செல்லம்மாள், அருணாசலம் ஆச்சாரி, தெட்சணாமூர்த்தி ஆச்சாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பெருமாள் பத்தர், இ.அகிலாண்டேஸ்வரி, க.கண்ணகை, தெ.நாகேஸ்வரி, அ.ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சேகர் ஆச்சாரி, புவனேஸ்வரி, மோகன் ஆச்சாரி, இராமலட்சுமி, சண்முகம் ஆச்சாரி, தயாளினி, அமுதினி, விக்னேஸ்வரன், அம்பிகா, காலஞ்சென்ற ஸ்ரீனிவாசன் மற்றும் சுதாகரன், சாந்தி, செல்வம் (ஜேர்மனி), கோமதி(ஜேர்மனி), சிவனேசன், திலகலட்சுமி, குமரன், அஜந்தன், ஜனனி, தனஞ்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் வைத்தீஸ வரன், சிவசங்கர், அபிராமி, சிவதர்சன், நிவாசன், ஜெருசன், விதூசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.08.2003) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.90,சிவன் கோவில் வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன்மார்,
பேரப்பிள்ளைகள்.
(21642)(21-15-19)

### சின்னத்துரை மகேசன்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை (கண்டாக்கர்) மகேசன் (குட்டி) அவர்கள் 16.08.2003 சனிக்கிழமை ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் சின்னத்துரை-பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் சியாமளா சோதிலிங்கம் (ஜேர்மனி), கலா பாலசுந்தரம் (கல்வியங்காடு), சத்தியா ஜெயக்குமார் (கோண்டாவில்), சாந்தி சிவானந்தன் (வவுனியா), ராகினி ரட்ணசபாபதி (சுவிஸ்), கதிர்காமநாதன் சிவகௌரி (கனடா), சிவனேசன் தர்மிளா (கோண்டாவில்), கனதர்சிகா கலைச்செல்வன் (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு ஜேர்மனியிலுள்ள சோதிலிங்கம் என்பவரது இல்லத் தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு.
இராமகிருஷ்ணா வீதி, கோண்டாவில்.
**T.P : 077-6152348**
ஜேர்மனி **T.P.00492116839**

தகவல்:
குடும்பத்தினர்.
(21653)(21-15-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பற்றாக்குறை உள்ள நிலையில்

# வடக்கு - கிழக்கு ஆசிரியர்களை வேறு மாகாணங்களில் நியமிக்காதீர்!

## அடைக்கலநாதன் எம்.பி. அமைச்சுக்குக் கடிதம்

வவுனியா,ஓக.21

வடக்குக் கிழக்கில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்களை பிற மாகாணங்களில் நியமிப்பது கவலைக்குரியது.

கல்வி அமைச்சுக்கு இது தொடர்பாக எழுதிய கடிதத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவும் இக்கால கட்டத்தில் இப்பகுதியைச் சேர்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களை வேறு மாகாணங்களுக்கு அதுவும் அவர்களது விருப்பத்திற்கு மாறாக பணிக்கு அமர்த்தியிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

வடக்கு - கிழக்கு பாடசாலைகள் அனைத்தும் போரினால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் ஆசிரியர்களில்லாமல் வடக்கு - கிழக்கு மாணவர்களது கல்வி பின்தள்ளப்பட்டு தொண்டர் ஆசிரியர்களினால் ஓர் அளவு கல்விநிலை காப்பாற்றப்பட்டிருக்கும் இவ்வேளையில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்களை வேறு மாகாணங்களுக்கு அனுப்பியமை புதிராய் உள்ளது.

இந்த ஆசிரியர்கள் தங்களை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் எந்த இடத்திற்கு மாற்றினாலும் அங்கு சேவை செய்ய ஆயத்தமாய் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

வடக்குக் கிழக்கில் 6 ஆயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் தற்சமயம் மீள்புனரமைப்பு, மீள் குடியமர்வு என்பன நடைபெறுவதால் ஆசிரியர் பங்களிப்பு அங்கு அவசியம். ஏனைய மாகாண ஆசிரியர்கள் அனைவரும் தமது சொந்த மாகாணங்களிலேயே நியமனம் பெற்றுள்ளனர். பிறமாகாணங்களில் நியமிக்கப்பட்டுள்ள அனேகமான ஆசிரியர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதால் யாழ். மாவட்டத்தில் உள்ள தமது குடும்ப நலன்களை கவனிக்க முடியாதுள்ளது. மேலும் அவர்கள் பிறமாகாணங்களில் போக்குவரத்து வசதியின்மை, தங்குமிடப் பிரச்சினை போன்ற பல் வேறுபட்ட இன்னல்களிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

விருப்பமற்ற நிலையில் இவர்கள் அங்கு கடமை ஆற்றுவதால் எந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டார்களோ அந்த நோக்கம் நிறைவேற வாய்ப்பில்லாமல் போகிறது - என்றுள்ளது.

# உடுவில் கல்விக் கோட்ட நாடகப் போட்டி முடிவு

உடுவில் கல்விக் கோட்ட ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடையே இடம்பெற்ற சிறுவர் நாடகப் போட்டியில் முதலாம் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியும் இரண்டாம் பிரிவில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

கோட்ட மட்டத்திலான இப்போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்றது.

ஆரம்பப் பாடசாலைகளிடையேயான இப்போட்டி இரண்டு பிரிவாக இடம்பெற்றது. இப்போட்டியில் பதினொரு பாடசாலைகள் கலந்துகொண்டன.

பிரிவு I இல் உடுவில் மகளிர் கல்லூரியும் பிரிவு IIஇல் சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயமும் முதலாம் இடங்களைப்பெற்றுக்கொண்டன.

இப்பாடசாலைகள் வலயமட்டப் போட்டிகளில் உடுவில் கோட்டம் சார்பில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ஓ-86)




இலங்கை வங்கியின் 64 ஆவது வருட நிறைவை முன்னிட்டு வங்கியின் மானிப்பாய் கிளையில் அண்மையில் நடைபெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் சி.நடராஜலிங்கம் தந்தையை இழந்த சிறுமி ஒருவருக்கு காப்புறுதியுடன் சிறுவர் சேமிப்பு கணக்கின் கொடுப்பனவை காசோலையாக வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:சண்டிலிப்பாய் செய்தியாளர்)

## சாயி சிந்தனை

### கவலைப்படுவது வீண்



நம்மிடம் தவறு இருக்கும் போதுதான். நமக்கு எப்போதும் பயமும், கவலையும் அதிகரிக்கின்றன? நம்மிடம் எவ்விதமான தவறும் இல்லாதபோது பயம் என்பதற்கு என்ன வேலை இங்கே? பயமற்று இருக்கலாம்.

இக்காலத்தில் சின்னஞ்சிறிய விஷயங்களுக்கெல்லாம் கூட மனிதன் பயப்பட்டு நடுங்குகின்றான். ஏனெனில் அவனிடம் தவறுகள் நிறைந்திருக்கின்றன. இவைதான் பயம், கவலை, பதற்றம், வெறுப்பு, கோபம் என்பன இவற்றுக்கு காரணமாக அமைகின்றன. ஆகவே, நாம் அமைதியாக வாழ வேண்டுமானால் - ஒருங்கிணைந்து இசைவான வாழ்க்கை நமக்கு அமைய வேண்டுமானால் - நம்மிடம் இருக்கும் தவறுகளைக் களைய நாம் கடுமையாக முயற்சிக்கவேண்டும்.


உண்மையில் மனிதனுக்கு சோகம் என்பதே கிடையாது. அவன் ஆனந்தத்தின் வடிவம். தெய்வீகப் பேரானந்தத்தின் திருவடிவம். அப்படியிருந்தும் அவன் கவலையால் தன்னை வருத்திக் கொள்வானானால் அது அவனுடைய தீய பழக்கங்களால்தான் ஏற்படுகிறது. சோகம் எங்கிருந்தோ திடீரென்று அவன்மேல் வந்து இறங்கிவிடவில்லை. அவனிடம் இருக்கும் தீய குணங்களின் பிரதிச் செயல் (Reaction), பிரதிபலிப்பு (Reflection), பிரதித்வனி (Resound)தான் சோகத்திற்குக் காரணமாக அமைகின்றன. உங்களை யாராவது கடுமையாக விமர்சித்தால்கூட அது அவனிடமிருந்து வரும் தூஷணை அல்ல. உங்களுக்குள் இருக்கும் தீய குணங்களின் உணர்வே தூஷணையாக உங்களுக்குத் திரும்பி வருகிறது என்று புரிந்துகொள்ளுங்கள்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

# பயணிகளின் நம்பிக்கையை பேணும் 'எக்ஸ்போ எயர்'

கொழும்பு,ஓக.21

"எக்ஸ்போ" விமானசேவை நிறுவனம் கொழும்பு - யாழ். பயணசேவையில் "பொக்கர் எப் 27" (FOKKER F.27) என்ற புதிய ரக விமானத்தை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.




தரத்தினை மேம்படுத்த வேண்டுமென்ற இந்த நிறுவனத்தின் நோக்கத்திற்கு மேற்படி புதிய ரக விமானம் ஒரு படிக்கல்லாக அமைகின்றது. 50 ஆசனங்களைக் கொண்ட இந்த பொக்கர் ரக விமானம் ஹொலண்ட் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. "றோல்ஸ் றோய்" இயந்திரங்கள் மூலம் இயங்குகின்றது. மேலும் இது போதியளவிலான இருக்கை வசதிகளையும் பயணப்பொதிகள் வைக்கக்கூடிய இட வசதிகளையும் கொண்டுள்ளது. அதனால், விமானப் பயணத்தை விரும்பும் பயணிகளுக்கு இந்த விமானம் மிகவும் சௌகரியமாக அமைகின்றது. எக்ஸ்போ ஏவியேஷன் (பிறைவெற்) லிமிட்டட் என்ற இந்த நிறுவனத்தின் வர்த்தகக் குறியீட்டுப் பெயர் "எக்ஸ்போ எயர்" (EXPO AIR) என்பதாகும் தமது பயணிகளுக்கு அதி சிறந்த சேவையை வழங்குவதையே இது தனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. விமானப் பயணத்தின் போது பயணிகளின் அதிஉயர் பாதுகாப்பிலும் நம்பிக்கையிலும் இவர்கள் அதிக அக்கறை காட்டுகின்றனர். அதற்கமைய பயணிகளுக்குச் சிறந்த சேவையைக் குறித்த நேரங்களுக்குத் தொடர்ந்து வழங்குகின்றனர்.

மேலும் விமானத்தின் உள்ளமைப்பு பயணிகளுக்கு மிகச் சிறந்த முறையில் வசதிகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"நெக்ஸஸ் லோயல்ரி" அமைப்பிலுள்ள 27 அங்கத்துவ நிறுவனங்களில் "எக்ஸ்போ எயர்" நிறுவனமும் ஒன்றாகும். குறைந்த கட்டணத்துடன் சிறந்த சேவையை அது வழங்குகிறது.

இந்த நிறுவனத்தின் சேவை அதி சிறந்தது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலான பயணிகளின் கருத்துரைகள் சில வருமாறு:




இது ஓர் உள்நாட்டுப் பயணமாக இருந்தபோதும், நான் பிரயாணம் செய்த போது ஒரு சர்வதேச விமானப் பயணத்தின் போதான ஓர் உணர்வினை எனக்கு ஏற்படுத்தியது றியென்ஸி விஜேயதிலக (முகாமைத்துவ பணிப்பாளர், ஹற்றன் நஷனல் வங்கி).

'இலங்கைக்கு விஜயஞ்செய்து "எக்ஸ்போ எயர்" விமானத்தில் பயணம் செய்வது மிகவும் சௌகரியமாக இருப்பதோடு, மட்டற்ற மகிழ்ச்சியையும் தருகிறது' பிரதி உதவி செயலர் டொனால்ட் முகாம் (தெற்காசிய அரசியல்துறை விவகாரம் அமெரிக்கத் தூதரகம்.)

'எதுவித சிரமமுமில்லாத அபாரமான விமானப் பயணம்' சைமன் பொரர் த ஹலோ ரஸ்ற் (THE HALO TRAST).

'தங்களது சிறந்த சேவையும் விமானப் பணியாளர்களின் அழகிய புன்னகையும் எங்களைப் பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நாங்கள் எப்போதும் எக்ஸ்போ எயரிலிலேயே பயணம் செய்வோம்' சங்கீதா வீரத்தன (சினிமா நடிகை).

'அதிசிறந்த சேவை' மிக்க மகிழ்ச்சி அத்தோடு நல்ல நட்புக்கு உகந்த விமானப் பணியாளர்கள் உண்மையிலேயே இதுவரை அனுபவிக்காத உன்னதமான விமானப் பயணம்' கிறிஸ் லோங் (அரசியல் பிரிவு அதிகாரி அமெரிக்க தூதரகம்). *

# முந்திரிகை செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடன் உதவிகள்

## ஹற்றன் நஷனல் வங்கி வழங்குகிறது

யாழ்ப்பாணம்,ஓக.21

கீரிமலை கமநல சேவை கேந்திர நிலையப் பிரிவிலுள்ள பெரியவிளான் கிராமத்தில் திராட்சை செய்கையில் ஈடுபட்டுள்ள 21 விவசாயிகளுக்கு ஹற்றன் நஷனல் வங்கி மூலம் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக திராட்சைச் செய்கையை ஊக்குவிப்பதற்கு இக்கடனுதவி வழங்கப்படவிருப்பதாகவும் -

இதற்கென 21 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு தலா 50 ஆயிரம் ரூபா முதல் இரண்டு இலட்சம் ரூபா வரை இவர்களுக்கு கடனாக வழங்கப்படும் என்றும் -

கீரிமலை கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சாவித்திரிதேவி குகனேசன் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். அலுவலகத்தினால் இக்கடனுக்கான கொடுப்பனவு விரைவில் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரியவிளான் பகுதியில் மீளக் குடியமர்ந்த பல விவசாயிகள் திராட்சைச்செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றும் - கூறப்பட்டது.

இதேவேளை, வலிகாமம் பிரதேசத்தில் முந்திரிகைச் செய்கையில் ஈடுபட்டுள்ள முந்திரிகைச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை ஒருலட்சம் ரூபா வரை கடனுதவி வழங்க முன்வந்துள்ளது.

பெரியவிளான் விவசாய சம்மேளனத்தை சேர்ந்த 21 முந்திரிகைச் செய்கையாளர்களுக்கு இக்கடன் தொகையை வழங்க இருப்பதாக வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முந்திரிகைச் செய்கையின் அளவைப் பொறுத்து ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒருலட்சம் ரூபா வரைக்கும் கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

இதற்காக 10 லட்சம் ரூபா நிதியினை வங்கி ஒதுக்கியுள்ளதாகவும் சுந்தரேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஹற்றன் நஷனல வங்கி மூலம் 670 விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்காக 1 கோடி 70 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது எனவும் -

இந்நிதியில் பெரும்பாலானவை வலிகாமம் பிரதேச விவசாயிகளுக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் -

இவ்வருடம் மேலும் பல விவசாயிகளுக்கு கடனுதவி வழங்க தாம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் - முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறைந்த, நடுத்தர வருமானமுடைய உழைப்பாளர்களுக்கு இலகுவில் செலுத்தக்கூடிய வீடமைப்புக் கடன்கள் வங்கி மூலம் வழங்கப்பட உள்ளன. வீட்டுடனான காணி வாங்க, காணிவாங்க, வீட்டு முடிவுறுத்தல் வேலைகளை மேற்கொள்ளவென இக்கடன் வழங்கப்படும் என முகாமையாளர் கூறினார். (ம-எ-152-135)

தொழில் வளம்

# பொறியியல் பட்டப்படிப்பை சென்னையில் தொடர வாய்ப்பு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத இலங்கை மாணவர்கள் மேற்கல்வியைத் தொடர்வது குறித்து குழப்பமான சூழ்நிலையே நிலவுகிறது.

இலங்கைப் பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு எழுத தேர்ச்சிபெற்ற மொத்தம் 93 ஆயிரத்து 286 மாணவர்களில் இங்கு 14 ஆயிரத்து 240 மாணவர்கள் மட்டுமே சேர்க்கைபெற முடியும் என்ற நிலை உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியாவின் தமிழகத் தலைநகர் சென்னை அருகில் உள்ள "ஆறுபடை வீடு பொறியியற் கல்லூரி"யின் பதிவாளர் தி.சு.கந்தசுவாமி, யாழ். பகுதி மாணவர்களுக்கு தக்க வழிகாட்டுதல் செய்து, மிகக் குறைந்த செலவுத்திட்டத்தில் மேற்கூறிய கல்லூரியில் நான்கு ஆண்டு 'B.Eng.' கற்கைநெறியைப் பயின்று அண்ணா பல்கலைக்கழக பட்டயம் பெற உதவும் நோக்கத்துடன் யாழ். வந்துள்ளார்.

"ஆறுபடைவீடு பொறியியல் கல்லூரி" இந்தியாவில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் சிறந்த மிகப் பல கல்லூரிகளை நிறுவி வெற்றிகரமாக நடத்திவரும் "விநாயகா மிஷன்" என்ற தொண்டு நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படுகிறது.

யாழ். மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துவார்கள் என தான் எதிர்பார்ப்பதாக தி.சு.கந்தசுவாமி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்ரான்கானுக்கு எதிராக அமெரிக்கப் பெண் வழக்கு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் இம்ரானுக்கும் தனக்கும் பிறந்த மகளின் கல்விச் செலவுக்கு இம்ரான் உதவ வேண்டும் - இவ்வாறு அமெரிக்கப் பெண்ணான சீட்டாவைட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்.

51 வயதான இம்ரான்கான் இங்கிலாந்தைச் சேர்ந்த வெள்ளையினப் பெண்ணான ஜெமிமா கானை திருமணம் செய்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, சீட்டாவைட் என்ற அமெரிக்கப் பெண் தனக்கும் இம்ரான்கானுக்கும் இடையில் தொடர்பு இருந்தது எனவும், தனது மகள் டைரியனுக்கு இம்ரான்கான் தந்தை எனவும் கூறிவருகிறார். ஆனால், இம்ரான் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில், 11வயதான டைரியனின் கல்விச்செலவுக்கு உதவுமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளர் சீட்டாவைட்.

"எனது கோரிக்கைக்கு இம்ரான் கானின் பதில் இதுவரை ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது.இதனால் டைரியனின் சார்பாக கலிபோர்னியா நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தேன். இம்ரான்,கடந்த சில வருடங்களாக இதுகுறித்து மௌனம் சாதித்து வருகின்றமையே அவரது குற்றத்தை நிரூபிக்கின்றது.

ஒருதந்தைக்கு தனது பிள்ளையுடனான உறவைவிட, தேர்தல் எதுவும் முக்கியமானதல்ல. இந்த உறவைப் புறக்கணிப்பவர்களுக்கு அரசியல் அதிகாரங்களைச்சுவைக்கும் யோக்கியதையும் இல்லை.

-இவ்வாறு அமெரிக்கப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார் சீட்டாவைட்.

இம்ரானின் சாயலைக்கொண்ட டைரியனின் பெயரை டைரியன் ஜேட் பிரீட்டானியாகான் என மாற்றுவதற்குச் சட்ட நீதியான நடவடிக்கைகளை சீட்டாவைட் மேற்கொண்டுள்ளார்.

# உலக மெய்வன்மை ஆணைக்குழுவுக்கு சுசந்திகா ஜயசிங்க போட்டியிடுகின்றார்!

சர்வதேச மென்வன்மைச் சம்மேளனங்களின் சங்கத்தின் (ஐ.ஏ.ஏ.எவ்) மெய்வன்மை ஆணைக் குழு அங்கத்தவர் பதவிக்கு இலங்கையின் ஓட்ட ராணி சுசந்திகா ஜயசிங்க போட்டியிடுகிறார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி பரீஸில் இத்தேர்தல் நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள 9 ஆவது உலக மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்குபற்றும் மெய்வல்லுநர்கள் இத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுள்ளனர்.

ஐ.ஏ.ஏ.எவ். மெய்வன்மை ஆணைக் குழுவில் 19 பேர் இடம்பெறுவர். இவர்களில் 12 பேர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர். 7 பேர் ஐ.ஏ.ஏ.எவ். இனால் நியமிக்கப்படுவர்.

தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் 2007 ஆம் ஆண்டு வரை இந்த ஆணைக்குழுவில் அங்கம் வகிப்பர். சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனங்களின் சங்கத்தின் முக்கிய மாநாடுகளில் மெய்வல்லுநர்களின் பிரதிநிதிகளாக இந்த ஆணைக்குழு உறுப்பினர்கள் பங்குபற்றுவர்.

உலக சாதனையாளர்கள், ஒலிம்பிக் சம்பியன்கள், உலக சம்பியன்கள் உட்பட 26 பேர் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் சுசந்திகாவை வெற்றியீட்டச் செய்வதற்கு இலங்கை மெய்வன்மைச் சங்கம் தனது முழுப் பலத்தையும், செல்வாக்கையும் பிரயோகிக்கவுள்ளது.

சுசந்திகா ஜயசிங்கவின் வெற்றி வாய்ப்புக் குறித்து இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் சுனில ஜயவீர கருத்துத் தெரிவிக்கையில்:-

"இது சவாலானதுதான். எனினும், ஆசியக் கண்டத்தின் 45 நாடுகளின் ஆதரவைப் பெற்றுவிட்டால் கடினமானதாக அமையாது.

சுசந்திகா தெரிவுசெய்யப்பட்டால நாட்டுக்குக் கௌரவம் கிடைப்பது மட்டுமல்ல, சர்வதேச ரீதியான விவாதங்களில் இலங்கை பங்குபற்றுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்" - என்றார்.

ஐ.ஏ.ஏ.எவ். மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவீர, செயலாளர் பிரேமா பின்னவல ஆகியோர் ஏற்கனவே பரீஸுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள வலிகாமம் வலய மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் இன்று முதல் 5 தினங்கள் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் சங்கம் மற்றும் யாழ்.மாவட்ட விளையாட்டுக்குழு ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் இந்தப் பயிற்சி முகாமில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் 13, 15 வயதுப் பிரிவினர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி முகாமிற்கு அந்தந்தப் பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் இரு பிரிவுகளிலிருந்தும் தலா இரு வீரர்களை அனுப்பிவைக்குமாறும் -

பயிற்சிக்கு வரும் வீரர்கள் உதைபந்தாட்ட வீரருக்கான உடை, காலணி மற்றும் பந்து ஆகியவற்றை எடுத்து வருமாறும் -

யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத் தலைவர் ந.சிவகடாட்சம் கேட்டுள்ளார்.

இதேவேளை, வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சிமுகாம் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 31 ஆம திகதிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஓக.21

ஓல்ட் மைக்ஸ் கிரிக்கெட் அபிவிருத்திச்சபை நடத்தும் முக்கோணக் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மட்டக்களப்பு வெபர்ஸ் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் மாத்தளை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன. (ஒ-5)

## டெனிஸ் வீரர் பயஸுக்கு மூளையில் கட்டி

புளோரிடா,ஓக.21

இந்தியாவின் பிரபல டெனிஸ் வீரர் லியாண்டர் பயஸ் மூளையில் கட்டி இருப்பதால் அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

30 வயதான பயஸ், உலகில் தலைசிறந்த இரட்டையர் டெனிஸ் வீரர்களில் ஒருவர். இவர் அமெரிக்காவில் ஏடிபி மாஸ்டர் டெனிஸ் போட்டியில் ஆடிக் கொண்டிருந்த போது கடுமையான தலைவலி ஏற்பட்டது உடனே அவர் தானாகவே அருகிலுள்ள மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்துகொண்டார்.

மூளையில் உள்ள கட்டி காரணமாகத்தான் தலைவலி இருப்பதாக டாக்டர்கள் கூறியதால் உடனடியாக அவர் ஓஹியோவிலுள்ள புற்றுநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும், எவ்விதமான கட்டி என்பது பற்றிய விவரம் முழு சோதனைக்குப் பின் இன்னும் ஓரிரு தினங்களில் தெரியவரும் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும், லியாண்டர் தற்போது நன்றாகப் பேசுவதாகவும், எவ்வித அபாயமும் இல்லை என்றும் கூறப்படுகிறது.


## VACANCIES

We are a long established Engineering and Marketing concern. Looking out for young and energetic individuals to join our organization.

1. CIVIL ENGINEER
(B.Sc. Eng. with minimum of 5 years Experience)
2. QUANTITY SURVEYOR
(NCT/NBT with minimum of 5 years Experience)
3. TECHNICAL ASSISTANT)
(NTC/NDT with minimum of 5 years Experience)
4. GENERAL CLERK

*Salary*: Negotiable based on the candidates Qualification and experience.

Please forward your applications with in 7 days of this advertisement to Samuel, Sons & Co.Ltd. Jaffna Branch.

*JAFFNA BRANCH:*
SAMUEL, SONS&Co.LTD,
412,414,HOSPITAL ROAD,
JAFFNA. (சி-29663)(14-16)

*HEAD OFFICE:*
SAMUEL, SONS & Co.LTD,
268,NAWALA ROAD,
NAWALA.



## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி திரு. N.ஸ்ரீஸ்கந்தராஜா
அவர்களின் அன்பு மாமியார்
### திருமதி P.பாக்கியலக்சுமி

அவர்களின் மறைவிற்காக துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
*தாதியர் பயிற்சிப்பாடசாலை*, 2001'A' பிரிவு, 2002 'A' பிரிவு
*யாழ்ப்பாணம்.* தாதிய மாணவர்கள்,
(21669) (32-14-16) உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.



## பதவி வெற்றிடம்

தொழில்நுட்பவியலாளர் [ஒருவர்]
(TECHNICAL OFFICER)

**தகைமை** :- அரச/தனியார் தொழில்நுட்பவியலாளர் பதவியில் இருந்து ஒய்வுபெற்ற உத்தியோகத்தர்/N.D.T. சான்றிதழ் உடையவர்.

**வேதனம்** :- 7500/=

**பதவிக்காலம்** :- 5 மாதங்கள்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை எதிர்வரும் 2003.08.28 இற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக *தலைவர்/செயலாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், 73, கண்டிவீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**73, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**2003.08.20.** (சி-29664)(14-16)

**வை. தியாகராசா**
**- கௌரவ தலைவர்.**



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
31 - 10 - 1940



இறப்பு
22 - 07 - 2003

### அமரர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்

மனிதருள் நல்ல மாணிக்கமாய்த் திகழ்ந்தீர்!
புனிதமான பணிகள் செய்தே நீர் சென்றிட்டீர்
முப்பத்தொரு நாளாகக் கலங்குகின்றோம் நாம்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*10 ஆவது மைல்,*
*ஆவரங்கால்.*

-அன்புச் சகோதரர்கள்.

(சி-29662)(32-14-16)



## மரண அறிவித்தல்

### திருமதி பார்வதிப்பிள்ளை குமாரசாமி

வல்லிபுரக்குறிச்சி, புலோலி தெற்கைச் சேர்ந்த திருமதி பார்வதிப்பிள்ளை குமாரசாமி அவர்கள் 18.08.2003 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவேந்திரன் (கொழும்பு) மற்றும் லோகேஸ்வரன் (கண்டி), சிவராசா (ஜேர்மனி), கிருஷ்ணதாசன் (கல்முனை), உமாபதி (ஜேர்மனி), ஐங்கரமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் திலகநாயகி, ஜெயலக்சுமி, விஜயேந்திரா, விஜயலக்சுமி, காண்டிபன், நந்தினி ஆகியோரின் அருமை மாமியாரும் நிறோஜி, நிசாந்தன், நிதர்சன், சகானா, சிந்துஜா, பாருதாஸ், புவிதாஸ், பாருஜா, பாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு, புலோலி.*
*(வல்லிபுரக்குறிச்சி)* (21671) (32-14-16)

**தகவல்:**
**பிள்ளைகள்.**



## Modern College of Commerce

புளியடிச் சந்தி - சாவகச்சேரி
(கண்டுவில் லேன்)

பிரத்தியேக வகுப்புகள்

**Day Class புதிய பிரிவு**
ஆரம்பம்: 23-08-2003
காலை 8.00 மணி

2004,2005 வணிகப் பிரிவு மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.

கணக்கீடு : T.சுதர்சன்
பொருளியல்: S.மகேந்திரம்.

(21654) (32-14-16)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இடர்கள் கெடுக' ஆற்றுகை

யாழ்ப்பாணம்,ஓக.21

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத தினால் நடத்தப்பட்டுவருகின்ற 'இடர்கள் கெடுக' என்னும் அரங்க ஆற்றுகை அடுத்த வாரம் காரைநகர் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளதாக நிறுவனத்தின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேசத்தில் உள்ள கிராமங்களிலும் பாடசாலைகளிலும் தொடர்ச்சியாக 20 ஆற்றுகைகள் இடம பெறவுள்ளன.

மிதிவெடிகள் உட்பட வெடிபொருள களில் இருந்து மக்கள் தம்மைப் பாது காத்துக்கொள்ளும் வகையில் விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த ஆற்றுகை நடத்தப்பட்டு வருகிறது. (ஒ-10)


**MATHS CENTRE**

M.M.V. Road, Nelliady.

**A/L - 2004 DAY CLASS**

(பகல் நேர வகுப்பு)

கலை - வர்த்தகம்

வழமையான ஆசிரியர்குழு

(சகல பாடங்களும் நடைபெறும்)

ஆரம்பம்: 23.08.2003

சனி 7.00 a.m. (ப.நே.)

(C/29659) (26-18-13-21)



ACTION CONTRE LA FAIM

# JOB VACANCIES

- Action Centre La Faim (Action Against Hunger) is a non - profit making humanitarian International.Non Governmental Organization. (INGO) working in the areas of Food Security (Income generating activities, agriculture, etc.) and water & Sanitation (Rehabilitation of water Structures and Hygiene awareness)

**For our programmes based in Jaffna, Action centre *La* Faim is seeking the following Positions.**

**TECHNICAL ENGINEER**

- Responsible for assessing water and Sanitation Structures and subsequently, designing technical Solutions, making cost estimates and assess the quality of the work carried out.
- Skills specifications for applicants:
  - University degree in civil engineering
  - Experience in a similar post
  - Strong motivation for humanitarian work
  - Fluent - spoken and written English and Tamil
  - Proficiency in Computers

**LOUISTIC ASSISTANT**

- Responsible for maintenanice of vehicles and store Keeping
- Skills specifications for applicants:
  - G.C.E. Advance Level Pass/ Higher education
  - Valid driving license
  - Fluent spoken and written English and Tamil
  - Knowledge in motor Machanism
  - Proficiency in Computers

Duration of this contract: 4 Months

Please send application letters and CV's before 30th August 2003 to the following address:

**The Head of Base**

05, Racca Road,

Jaffna.

(சி-29660) (24)


# மரண அறிவித்தல்கள்

## முத்தையா பஞ்சாட்சரம் (ஆனந்தன்)

8/4, ஓட்டுமடம், செம்பிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது இல.465, 6ஆம் கண்டம், இராமநாதபுரத்தில் வசித்தவருமாகிய முத்தையா பஞ்சாட்சரம் (ஆனந்தன்) நேற்று (20.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் 9ஆயிரம் செல்லையா தம்பதிகளின் மருமகனும் சிவம், சேந்தன், கேதா, துசி ஆகியோரின் அன்புத தந்தையும் நகுலேஸ்வரி, திருநாவுக்கரசு, நகுலேஸ்வரன், அருளானந்த சோதி (ஈசன்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு இராமநாதபுரத்தில் நடைபெற்று, பூதவுடல் இராமநாத புரம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.465, 6ஆம் கண்டம்,*
*இராமநாதபுரம்,*
*கிளிநொச்சி.* (21662)

தகவல்:
ப.கமலாம்பிகை (மனைவி),
(மலர், 9 ஆயிரம் செல்லையாவின் மகள்)

(25-21-18-13)

## செல்வி மீனாம்பிகை இராமநாதன்

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட செல்வி மீனாம்பிகை இராமநாதன் நேற்று (20.08.2003) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கந்தையா வீதி,
சாவகச்சேரி. (21666)

ஸ்ரீமதி துரைரத்தினம்
(சகோதரி)

# அடுத்த ராணுவத் தளபதி பதவிக்கு மேஜர் ஜெனரல்களிடையே போட்டி

## சிங்களப் பத்திரிகை வெளியிட்ட தகவல்

கொழும்பு,ஓக.21

லெப்.ஜெனரல் லயனல்பலகல்ல வுக்குப் பின்னர் இராணுவத் தளபதி பதவியை கைப்பற்ற இராணுவ அதி காரிகளிடையே பெரும்போட்டி நிலவு வதாக சிங்களப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

தற்போதைய ராணுவத் தளபதி லெப்ஜெனரல் லயனல பலகல்லவின் சேவைக் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி முடிவடைகி றது. இதனால், அடுத்த தளபதி யாா என்ற கேள்வி எழத் தொடங்கியுள்ளது.

அரசியல் அழுத்தங்கள் காரண மாக சேவைக்காலம் நீடிக்கப்படுவது மற்றும் தமக்குத் தேவையானோரைத் தொடர்ந்து சேவையில் வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகளை படைகளின தளபதி என்ற வகையில் ஜனாதிபதி மேற்கொண்டதால் கடந்த 6 வருடங் களில் பல திறமைவாய்ந்த அதிகாரி கள் அதிருப்தியடைந்து ஓய்வுபெற்றுள் ளனர் எனவும் -

மறுபுறத்தில் ஊழல்கள், மோசடி களில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் பலர் பதவி உயர்வுகளைப் பெற்றுள்ளனர் எனவும் -

அவர்களில் ஒருவரே அடுத்த ராணுவத் தளபதியாக நியமனம் பெற வாய்ப்புகள் உள்ளன எனவும் -

ராணுவ வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன.

தற்போதைய ராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல 15.06.2000த்தில் ஓய்வுபெற்றிருக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி அவ ருக்கு இதுவரை மூன்றரை ஆண்டுகள சேவை நீடிப்பை வழங்கியுள்ளார். 15.12.2003 இன் பின்னரும் அவருக்கு ஜனாதிபதியால் சேவை நீடிப்பு வழங் கப்பட்டால் புதிய ராணுவத் தளபதி ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை உருவாகாது.

ராணுவத் தளபதிக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாவிடின் சேவை மூப்பின் அடிப்படையில் மேஜர் ஜென ரல்களான எல்.சி.ஆர்.குணவர்த்தன, ஏ.ஈ.ஓ.விஜேந்திரா, எஸ்.எச்.எஸ். கொட்டகொட, ஏ.எம்.சி.பபிள்யுபி. சென விரத்ன, ஜீ.சி.எஸ் பொன்சேகா, எம்.டி. எஸ்.சந்திரபால, என்.மல்லவராச்சி, டி.எஸ்.கே.விஜேசூரியா ஆகியோரில் ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படலாம்.

இருப்பினும் மேஜர் ஜெனரல்களான எல்.சீ.ஆர்.குணவர்த்தனா 22.11.2003 அன்றும் -

ஏ.ஈ.ஓ. விஜேந்திரா 29.8.2003 அன் றும் 55 வயதைப் பூர்த்தி செய்கின்றனர். எனவே இவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாவிடின் அவர்கள் ராணுவத் தளபதிகளாகும் வாய்ப்பை இழப்பர்.

எவ்வாறாயினும் படைகளில் பதவி உயர்வுகளை வழங்கும்போது கடைப பிடிக்கப்படும் நடைமுறைகள் கைவிடப பட்டு அரசியல்வாதிகளின் தேவை களுக்கும் விருப்பங்களுக்கும் அமை யவே நியமனங்கள் வழங்கப்படுவதால ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வருமவரை அடுத்த ராணு வத்தளபதி குறித்து உறுதிபடத் தெரி விக்கமுடியாது என்றுள்ளது. (ஒ)


**BEACON**

VATHIRY KARAVEDDY

A/L 2003 DAY CLASS

கணித. உயிரியல் பிரிவு

ஆரம்பம்- 23.08.2003

பி.ப. 3.30 மணி (சனி)

(21656) (26-21-13-18)


### அரியாலை, முள்ளிப் பகுதியில்

# மிதிவெடி அகற்றப்படாததால் மீள்குடியமர்வுப் பணி தாமதம்

யாழ்ப்பாணம்,ஓக.21

அரியாலை, மணியந்தோட்டப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை முள்ளிப் பகுதியில் குடிய மர்த்துவதற்கு நல்லூர் பிரதேச செய லகம் மேற்கொண்ட நடவடிக்கை அங்கு மிதிவெடிகள் அகற்றப்படாமையால் கைகூடவில்லை.

முன்னுரிமை அடிப்படையில் முள்ளி உட்படச் சில கிராமங்களில் விரை வாக மிதிவெடிகளை அகற்றித் தரு மாறு சுமாா 4 மாதங்களின் முன்னர் உரிய நிறுவனத்துக்கு பிரதேச செய லகம் வேண்டுகோள் விடுத்தும் இது வரையும் அவற்றை அகற்றும் பணி கள் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் என்று படையினரால் பிரகடனப்படுத்தப் பட்ட மணியந்தோட்டப் பகுதி மக்கள இதனால் குடியிருக்க இடமின்றி அலைவதாகவும் - நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அவர்கள் தினமும் வந்து செல்வதைக் காணக் கூடிய தாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்பொழுது இவர்களை வேறொரு இடத்தில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6-10-86)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 501 |
|---|---|
| திகதி | 19.08.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 4128977-4145239

வெற்றி இலக்கங்கள் **01 18 30 54**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டது




இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 364,191 | 10 | 3,641,910 |
| 2 இலக்கங்கள் | 33,495 | 20 | 669,900 |
| 1 இல + லக்கினம் | 33,075 | 30 | 992,250 |
| 2 இல + லக்கினம் | 2,982 | 100 | 298,200 |
| 3 இலக்கங்கள் | 883 | 500 | 441,500 |
| 3 இல + லக்கினம் | 89 | 5,000 | 445,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 434,720 | - | 7,888,760 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.7,888,760/-

தொடர் இல. 5128137க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 22ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4136329-0-89
4139078-9-94
4134546-0-59
4142534-6-89
4142481-6-32

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரச்சினை வளர்ந்ததற்கு அரசியல்வாதிகளே முழுப்பொறுப்பு

# மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் நாட்டின் எதிர்காலம் பாதாளத்தில்!

**இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளுக்கான பொறுப்பை அரசியல்வாதிகளே ஏற்கவேண்டும் என்கிறார் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூக விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் எஸ்.ரீ.ஹெட்டிகே. 'சிலுமின' வார இதழில் வெளியான [illegible] கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

இந்நாட்டு மக்கள் தினந்தோறும் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட பிரச்சினைகளையும், அவர்களது அனுபவங்களையும் நோக்கும் போது, இன்றைய கால கட்டத்தில் நாடு முழுவதிலும் பலதரப்பட்ட சமூக பொருளாதார சிக்கல்கள் அதிகரித்துச் செல்வதை எம்மால் உணரக்கூடியதாக உள்ளது. வாழ்க்கைச் சுமை, தொழில்வாய்ப்பின்மை, வறுமை, குற்றச்செயல்கள், தான்தோன்றித்தனமான போக்கு மற்றும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஆகிய துறைகளில் காணப்படும்; இக்கட்டுக்கள், தெருவோரத்தில காணக்கூடிய தவறான நடத்தைகள், திடீர் விபத்துக்கள், நடவடிக்கைகளில் கருத்து வேறுபாடுகள், வேலை நீக்கம், லஞ்சம் பெறுதல் மற்றும் போஷாக்கின்மை போன்ற பிரச்சினைகள் நாட்டின் சமூக பொருளாதாரச் சிக்கல்களில் ஒரு சில உதாரணங்களாகும்.

இவ்வித சமூக பொருளாதார சிக்கல் நிலை கடந்த சில தசாப்தங்களாக நாடு பூராவும் அதிகரித்து வருவது தொடர்பாக முன்னைய கட்டத்தில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறறன. ஆயினும் அரசியல்வாதிகள், குறிப்பாக அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த வேளைகளில், தமது எதிரணியினரான அரசுத் தரப்பினர் மீது இச்சிக்கல்களுக்கான பொறுப்புக்களைச சுமத்தி, தாம் பொறுப்புக்களினின்றும் விலகிக் கொண்டதோடு, அந்நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குத் தேவையான கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் உருவாக்குவது தொடர்பாக எவ்வித முயற்சிகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

### ஏனோ தானோ போக்கு

இவ்வித சூழ்நிலையில், இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பான பேச்சுகள் நாடாளுமன்றத்தினுள்ளோ அல்லது வெளியிலோ மேற்கொள்ளப்படுவதாகத் தோன்றவில்லை. இக்கோணத்திலிருந்து நோக்கும் போது, இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல்வாதிகள் எனக் கருதப்படுவோரே பொறுப்பானவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகள் மட்டுமன்றி, எதிரணியைச் சேர்ந்த அரசியல் வாதிகளும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். ஏனெனில், எதிரணியில் உள்ள அரசியல் வாதிகள் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் பற்றிச் சிந்திக்காது, ஆட்சியிலுள்ள கட்சியைத் தோற்கடிப்பதன் மூலம் எவ்வாறாவது அதிகாரத்தை அடையும் வழிமுறை பற்றி சிந்திப்பதனாலாகும். ஜனநாயக முன்னேற்றம் கொண்ட நாடுகளில், முக்கிய எதிர்க்கட்சி 'நிழல் அமைச்சரவை' மூலம் தமது கட்சியிலுள்ள திறமை மிக்கவர்களை பல துறைகளிலும் ஈடுபடவைத்து, அத்துறைசார் நிபுணத்துவம் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வதுடன் அரசாங்கத்தின் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் விமர்சிப்பதன் மூலம் நடவடிக்கைகளை மறுசீர் அமைப்பதற்கும் மாற்றுக் கருத்துக்களையும் நடைமுறைகளையும் முன்வைப்பதன் மூலம், முக்கிய எதிர்க்கட்சியே பொது மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய சிறந்த திட்டங்களை அரசிடம் சமர்ப்பிப்பதைக் காணமுடியும். ஆனால், நம் நாட்டில் அவ்வித அரசியல் கலாசாரம் எதுவும் வளர்ச்சியடையவில்லை என்பதை, எதிர்க்கட்சிகளின் கடந்த கால நடவடிக்கைகளிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

நாட்டின் தற்போதைய சமூக, பொருளாதாரச் சிக்கல்களுக்குக் காரணங்களாக இரண்டு விடயங்களைச் குறிப்பிடமுடியும். கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த அரசுகளின் எதனையும் பொருட்படுத்தாத மனப்பான்மையை முதலாவது காரணமாகக் குறிப்பிடலாம். பொது மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு தெளிவான மற்றும் தர்க்க ரீதியிலான கொள்கைத் திட்டங்களை வகுத்து தீர்வு காண்பதை விட, தமது கட்சியின் பிரபலஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்களின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றி வைக்கவும், எவ்விதத்திலாவது தமது பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவும், அதற்காக அரச அதிகாரங்களையும், வளங்களையும் பாவிப்பதிலும் உற்சாகம் காட்டி வருகின்றனர். இந் நிலையால் ஊழலும், வீண் விரயமும் அதிகரிப்பதோடு, தலைமைத்துவத்தின் கௌரவத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுகிறது.

தமக்கு வாக்களித்த பொதுமக்கள், பெரும் சிரமத்துடன் பஸ்களில் நெருங்கியடித்துப் பிரயாணம் மேற்கொள்ளும்போது, பதவிக்கு வருமுன்னர் மோட்டார் சைக்கிளொன்றை விலை கொடுத்து வாங்க வசதியற்றிருந்த அரசியல்வாதிகள் பல லட்சம் ரூபா பெறுமதிகொண்ட, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பர சொகுசுக்காரை உத்தியோக பூர்வமாக மட்டுமன்றி தமது தனிப்பட்ட பாவனைக்கும் பாவித்து வருவதைக் காண்கிறோம். கிராமப்புறப் பாதைகள் மாட்டு வண்டியைக் கூடச் செலுத்திச் செல்ல இயலாத விதத்தில் பழுதடைந்திருக்கும் போது, பொது மக்களின் நிதியை அவ்வித பாதைகளைச் செப்பனிடப் பிரயோசனப் படுத்தாது, பொதுமக்களுக்கு எதுவித பிரயோசனமுமற்ற கட்டட நிர்மாண வேலைகளுக்கு ஒதுக்கிக் கொடுக்கின்றனர்.

### வடபகுதிப் பிரச்சினை

மேற்சொன்ன நியாயமற்ற நிர்வாக நடைமுறையின் கீழ், பொதுமக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, அவசிய வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்க இயலாது. இவ்வாறு இப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படாமையால் நிலைமை மேன்மேலும் தீவிரமடைகிறது. தற்போது இவ்வாறு தீவிரமடைந்துள்ள சமூக மற்றும் பொருளாதாரச் சிக்கல்களுக்கான முக்கிய காரணம் கடந்த இரு தசாப்த காலமாக நம் நாடு எதிர்நோக்கியிருந்த இனப்பிரச்சினைச சிக்கலாகும். அது வலுவடைந்து யுத்தமாக உருவெடுத்ததையடுத்து பெறுமதி மிக்க மனித உயிர்களும், பொருளாதார வளங்களும் விரைவாக அழிவடைய ஆரம்பித்தன. இற்றைவரை மகாவலித்திட்டம் போன்றவற்றை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாதவாறு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டமையால் அவற்றை இடையில் நிறுத்திக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான பெறுமதிமிக்க மனித உயிர்களை இழக்க வேண்டி ஏற்பட்டது.

இந்த இனப்பிரச்சினை அழிவுதரும் யுத்தமாக உருவாகாதிருந்தால் மேற்கூறிய நிதி வளத்தை நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடியதாயிருந்திருக்கும். அது மட்டுமன்றி, நாடு நலிவுற்றிருந்த வேளையில், அநாதரவான, பயங்கரமானதொரு சூழ்நிலையில் நாட்டின் அபிவிருத்திக்கான முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாத காரணத்தால் பொருளாதாரம் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது. வறுமை, தொழில் வாய்ப்பின்மை ஆகியவற்றால் நாட்டின் பெரும்பான்மையோர் பாதிப்புக்குள்ளானமை நிருபணமாயிற்று. அது மட்டுமன்றி, பொதுமக்களின் அவசிய தேவைகளான சுகாதாரம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்கதொரு அபிவிருத்தி ஏற்படாமை மற்றும் வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சி ஆகியன இக்கால இடைவெளியில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்களாகும்.

பொருளாதார வளர்ச்சி குன்றியமை மற்றும் போட்டி மனப்பாங்கு ஆகியவற்றால் எந்த வகையிலாவது பணம் தேடிக்கொள்ளும் முயற்சியில் சிலர் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. இத்தகையோர் லஞ்சம், ஊழல் மற்றும் திருட்டு என்பன போன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்படுவதுடன், ஒரு சில சந்தர்ப்பங்களில், தமது தொழில் வருவாய்க்கு மேலதிகமாக அதிக வருமானம் ஈட்டிக்கொள்ளும் நோக்கத்தில் சூது, லொத்தர் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளால் நாட்டின் கௌரவம், கலாசாரம், நடைமுறைகள் மற்றும் சட்டதிட்டங்கள் ஆகியன படிப்படியாக நலிவடைகின்றன. இவற்றுக்கு உதாரணங்களாகப் பல சம்பவங்களை எடுத்துக்காட்டமுடியும். இவைகள் பற்றியெல்லாம் இந்நாட்டுப் பொது மக்கள் நிறையவே தெரிந்து வைத்துள்ளனர்.

### பணம் ஈட்டுதல்

பணமே வாழ்க்கைக்கு அவசியமானது என்ற நிலையில், எவ்விதமாவது பணத்தைத் தேடிக்கொள்வதற்கு மனிதர் முயல்வது இயற்கையானதே. பணத்தைத் தேடிக்கொள்வதன் மூலம் தமது இலாபத்தை நோக்கமாகக் கருதும்வேளை, அம்முயற்சி மற்றொருவருக்குக் கஷ்டத்தை ஏற்படுத்தும் வகையில் அமைவது இன்று பரவலாகக் காணப்படும் ஒரு விடயமாகும் தனியார் பஸ் சாரதிகளில் பெரும்பாலோர், போக்குவரத்துச் சட்ட விதிகளை உதாசீனம் செய்து, தம் இஷ்டப்படி வாகனத்தைச் செலுத்துவதால், பாதையில் பிரயாணம் செய்யும் மற்றொருவரைக் காயப்படுத்துவதோடு, அதனை அலட்சியம் செய்யும் வகையில் தமது வாகனத்துக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லையே என ஆறுதலடையும் சுபாவத்துடன் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்வதற்கு இவ்வித மனப்பாங்கே காரணமாகும். பாடசாலை ஆசிரியர்களில் சிலர் தமது வகுப்பில் கல்விபயிலும் மாணவர்களுக்கு பாடசாலைக்கு வெளியில் தனிப்பட்ட வகுப்புகளை நடத்தி பணம் தேடிக்கொள்ள விழையும் மனப்பாங்கும் இத்தகைய விதத்தைச் சேர்ந்த தொன்றே. நச்சு மருந்துக்களை உபயோகித்துப் பழவகைகளை நன்றாகப் பழுக்கசெய்ய வைத்து, பாதையோரத்தில் வியாபாரம் செய்யும் வியாபாரி, பாவனையாளர்களின் திருப்தியையோ, உடல் ஆரோக்கியத்தையோ பற்றிக் கவலைப்படாத விதத்தில் செயற்படுவதும் இவ்வித மனப்போக்கின் காரணத்தினாலேயாகும்.

### வியெஸ்ரீ

குறைந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் மூலம் பணம் தேடிக்கொள்ள விழைவதும் இவ்வித மன எழுச்சியின் காரணமாகவேயாகும். இவ்விதம் பல உதாரணங்களின் மூலம், பலருக்கும் விதப் பாதிப்பும் ஏற்பட்டபோதும், தாம் தமது பணத்தைத் தேடிக்கொள்ளும் முயற்சியில் அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாது இயங்கும் சூழ்நிலை இன்று நமது சமூகத்தின் மத்தியில் காணப்படுவதை எடுத்துக்காட்ட இயலும்.

அதேசமயம், இவ்வாறான நடவடிக்கைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு வாய்மூடி மௌனிகளாக இருக்க வேண்டுமென்பது கருத்தல்ல. சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தகுதியுடையோர் பக்கச் சார்பின்றி, நியாயமாக நடவடிக்கைகள் எடுத்து தவறிழைப்போரைத் தண்டிக்க வேண்டியது. அவசியமானது என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ஆனாலும், அண்மையில் அமைச்சரொருவர் சுட்டிக்காட்டியுள்ளவாறு, குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்குவதன் மூலம் குற்றச்செயல்களை ஒழித்து விட முடியாது என்பது உண்மையான கருத்தாகும். குற்றமிழைப்போர் வெட்கித் தலைகுனியும் வகையில், எமது சமூகத்தில் அதிகரித்துள்ள ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வை இல்லாதொழிக்கும் விதத்தில் செயற்பட வேண்டியது அரசினதும் பொது மக்களினதும் கடமையாகும்.

இன்று நம் சமூகத்தில் அதிகரித்துவரும் சமூக பொருளாதாரச் சிக்கல்களுக்கான முக்கிய காரணங்களாக இரு விடயங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஒருபுறம் இந்நாட்டில கடந்த சில தசாப்தங்களாக இடம்பெற்று வந்த அலட்சியப் போக்குக்கொண்ட அரச நிர்வாகத்தை நேரடியான காரணமாகச் சுட்டிக்காட்டலாம். மறுபுறம், இரண்டு தசாப்த காலமாகத் தீர்வு காணப்படாத நிலையில் இருந்து வரும் இனப்பிரச்சினை தொடர்பான யுத்தத்தின் பாதிப்புக்களைக் குறிப்பிடலாம்.

### கடன் சுமை

நம்நாடு இற்றைவரை கடும் பொருளாதாரச் சிக்கலை எதிர்நோக்கியிருப்பது சகலரும் அறிந்த உண்மையாகும். பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக அதிகரித்துவரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக்கடன்கள், அக்கடன்களுக்காக வருடாந்தம் செலுத்தப்பட்டுவரும் வட்டி ஆகியவற்றுக்காக நாட்டுக்குக் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதியைச் செலவிடநேர்ந்துள்ளது. அரசின் அடிப்படைச சிக்கல் என்ற வகையில் வருடாவருடம் வரவு செலவுத்திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பெருந்தொகைப் பணத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனாகப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் அரசு உள்ளது. இதனால் மேற்குறிப்பிட்ட கடன் நிலுவை மேலும் உயர்வடைய நேர்கிறது. கடந்த சில தசாப்தங்களாக அரசுக்கு வருமானம ஈட்டித்தரும் சில அரச துறைகளின் வருமானம் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில், செலவீனம் அதிகரித்து வருவதால் பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிதி படிப்படியாக மட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனால் அரசதுறைகளின் சேவைத்தரத்தை உயர்த்துவதற்கோ அல்லது விரிவுபடுத்துவதற்கோ முடியாதநிலை தோன்றியுள்ளது.

சுகாதார சேவை, போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கான உதவிகள் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள நலிவு நிலைமை இதற்கான உதாரணமாகும். நாட்டின் பல தரப்பட்ட சமூகங்கள் எதிர்நோக்கும் பற்பல சிரமங்களைப் போக்குவதற்கான அத்தியாவசிய முதலீட்டு முயற்சிகள் யாவும் இதனால் தடைப்பட்டுள்ளமை தெளிவாகப் புரிந்து கொள்ளப்படக் கூடிய விடயமாகும்.

யுத்தம் காரணமாக கடந்த காலங்களில் ஏற்பட்ட வருடாந்த செலவினங்கள், மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிடப் பெருமளவு அதிகமானதாகும். முற்றாக அழிக்கப்பட்ட மற்றும் சேதப்படுத்தப்பட்ட விமானங்கள், கப்பல்கள், யுத்த தளபாடங்கள், கட்டடங்கள் மற்றும் இழந்த ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் ஆகியவற்றை நோக்கும்போது நாட்டின் நிலைமையைப் புரிந்துகொள்வது சிரமமானதாக அமையாது. மற்றொருபுறம், விடுதலைப் புலிகள் அமைப்பு சர்வதேச ரீதியில் பலம்வாய்ந்ததொரு அமைப்பாக உருவாகியதன் மூலம், ஆயுதங்களையும் ஏனைய வளங்களையும் ஒன்று திரட்டி, அச்சுறுத்தும் வகையில் ஸ்ரீலங்கா அரச படைகளின் மீது தாக்குதல்களை மேற்கொள்ளவும், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சொத்துக்களுக்கும், மனித உயிர்களுக்கும் சேதம் ஏற்படுத்தவும் ஆரம்பித்ததோடு, அவர்களால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் கடந்த காலங்களில் இந்நாட்டை ஆட்சி செய்த எந்த அரசினாலும் வெற்றி பெறமுடியவில்லை. நாட்டின் தலைவியான ஜனாதிபதியே மயிரிழையில் உயிர்தப்ப நேர்ந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு இவ்வகையானபலம் பெறுவதற்கு சர்வதேச ரீதியில் அவர்களது ஆதரவாளர்களிடமிருந்து கிடைத்த நிதியுதவி மட்டும் காரணமல்ல. அவர்களது கொள்கையை ஏற்று தமது உயிரையே அர்ப்பணிக்க முன்வந்த பெருந்தொகையான இளைஞர் மற்றும் யுவதிகளின தியாகமுமே காரணமாகும்.

### சமாதானத் தீர்வு

பிறிதொரு இனத்தினால் அமைக்கப்படும் அரசொன்றின் மூலம் தமதும், தமது மக்களதும் எதிர்கால வாழ்க்கையை அபிவிருத்தி செய்து கொள்ள இயலாதென்ற நம்பிக்கை விடுதலைப் புலிகளிடம் உறுதியாகக் காணப்பட்ட கருத்தாக அமைந்திருந்தது. அக்கருத்தே அவர்களது இம்முயற்சிகளுக்கெல்லாம் தூண்டுகோலாய் அமைந்தது. கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக நமது நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பொருளாதார, சமூக, கல்வி மற்றும் மொழி தொடர்பான கொள்கைகள் விடுதலைப் புலிகளது இக்கொள்கை நிலைப்பாடு உறுதியும் வளர்ச்சியும் அடையக் காரணங்களாகின.

வடபகுதி மக்களுக்கும் தென் பகுதி மக்களுக்கும் இடையிலான பேதங்களை நீக்கும் வகையிலான அரசியல் தீர்வு எட்டப்படுவது மட்டும போதுமானதல்ல. அதற்கான அர்த்தமுள்ள, பொருத்தமான மற்றும் நியாயமான பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவது அத்தியாவசியமாகும். இருந்த போதும், இன்றைய சூழ்நிலையில் ஏதாவது சமாதானத் தீர்வொன்று எட்டப்படமுடியுமானால் நெடுங்காலமாக சம்பந்தப்பட்ட இனப்பிரிவினிடையே இருந்து வந்த தொடர்புகள் அபிவிருத்தியடையும் விதத்தில் அத்தியாவசியமான சமூக, பொருளாதார, மீளமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பு உருவாகும். அவ்விதமன்றி, மீண்டும் ஒரு தடவை பயங்கர யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் நாட்டின் எதிர்காலம் எண்ணிப்பார்க்க முடியாத விதத்தில் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

மற்றொரு புறம் சமாதான விருப்புடன் ஜனநாயக ரீதியிலான அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதில் எம்மால் வெற்றிகாண முடியுமானால், நாட்டின் பெரும்பாலான பொதுமக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் விதத்தில் அதாவது, தற்போதைய சமூக மற்றும் பொருளாதாரச் சிக்கல்களினின்றும் விடுபட்டு வெளியேறும் விதத்தில் அத்தியாவசிய சமூக மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விரிவான வகையில் மேற்கொள்ளும் விதத்தில் முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளமுடியும். இவ்வாறான வாய்ப்புக்களை உருவாக்கும் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டியது இந்நாட்டின் வளமான எதிர்காலமொன்றை எதிர்பார்க்கும் சகல அரசியல் மற்றும் சமூக அமைப்புக்களதும் இன்றைய முக்கிய பொறுப்பாக அமைகிறது. இவற்றின் மூலம் அநியாயங்கள், சமூக ஏற்றத்தாழ்வு, வறுமை, லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் ஆகிய பலதரப்பட்ட சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணமுடியும். அதற்காக அரசியலில் பங்குகொள்ளும் வாய்ப்புக்களை அக்குழுக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க இயலும். அவ்வித வேலைத் திட்டங்களை நோக்கிப் பொது மக்களை ஒன்றுதிரட்டி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது இலகுவானதாக அமையும். எனவே, சமாதான நோக்கில் சமாதானத்தை உருவாக்க முயல்வது இன்று நமது முக்கிய குறிக்கோளாக அமைதல் வேண்டும். இந்நாட்டின் சாதாரண பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக மறுசீரமைப்பு ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாயின் அவ்வித சமாதான நோக்கும் சமாதானத்தைத் தேடுதலும் நம்மிடம் உருவாக வேண்டும். அவ்வாறில்லாது விடின் அது இந்நாட்டின் அரசியல் அவலத்தை தோற்றுவிக்கும் மிலேச்சத்தனமான நடவடிக்கையாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

✲

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## லஷ்சுமி சினிமா
இணுவில்

அல்டி மேட் ஸ்டார்
அஜித் - சாருகான் மற்றும் பலர் நடிப்பில்
**சாம்றாட் அசோகா** (21565)
ரீல்ஸ்
(ஹிந்தி படத்தின் தமிழாக்கம்)
காட்சி நேரம் 11.00, 2.00, 7.00 (புதியநேரம்).

## இரசாயனவியல்
**GROUP CLASSES**
DIAS B.Sc.(Hons) Spl.in Chem.
- GENERAL
- INORGANIC
- ORGANIC
- PHYSICAL

(துரித மீட்டல் வினா - விடை)
✪ முழு அலகு உள்ளடங்கலான
Paper Class
(விரைவில் ஆரம்பம்)
74,Palaly Rd,Thirunelvely.
(21439)(31-16-14)

## நிறஞ்சனாஸ்
சங்கானை

அர்ஜுன், கிரண் நடித்த
**பரசுராம்**
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**Red Sceropion**
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-16-18)

## நாகம்ஸ் சுன்னாகம்
சத்தியராஜ், ரம்பா, கபாலி,
செந்தில் நடித்த
**மில்றறி**
காட்சி நேரம் : 11.00, 3.00,
**Behind Enemy Lines**
(தாக்குதல் நிறைந்த படம்)
காட்சி நேரம் : இரவு 7.00 மணிக்கு
(31-14) (C29232)


## பாராட்டி மகிழ்கின்றோம்



எமது கழக உறுப்பினர்
**திரு.என்.சிவராஜா**
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
**செல்வன் பிரதீபன்**

கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து கடந்த க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தோற்றி முகாமைத்துவப் பிரிவில் 3A திறமைச் சித்திகளைப் பெற்று பாடசாலையிலும் சிறந்த மாணவனாகவும், மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 54ஆவது இடத்தையும் பெற்று பெருமை தேடியுள்ளார்.

இவர் எதிர்காலத்தில் சிறந்த கல்விமானாகத் திகழ இறைவனை வேண்டி எமது கழகம் வாழ்த்துகின்றது.

விளையாட்டுக்கழகம்,
இலங்கை வங்கி,
யாழ்.இரண்டாம் கிளை.

(C29673) (32-16-14)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

தீவக கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவிருந்த வினாத்தாள் தயாரித்தல் தொடர்பான கணித பாட செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

செயலமர்வு நடைபெறும் புதிய திகதி விவரம் உரிய ஆசிரியர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


## அறிவொளி NALLUR
A/L - 04 BIOIOGY
T.ஜெயசீலன - B.Sc.
**MICRO BIOLOGY**
ஆரம்பம்: 21.08.03 5.15 p.m.
(Thurs, Sun - 5.15 p.m.
A/L - 03 மீட்டல் பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
COM. Maths: B.ரவீந்திரன் B.Sc
(Mon.Wed 4 p.m; sat, sun 8a.m)
Physics: பிரபல கொழும்பு ஆசிரியா செந்தில் B.Sc
(sat, sun 10 a.m.)
Chemistry: சரவணபவன் B.Sc
(21644) (sat, sun 11 a.m.) (32)

## ராஜா யாழ்ப்பாணம்
எதிர்வரும் 28ஆம் திகதி வரை
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.
விஜயகாந்த், கிரண், விவேக்
நடித்த



**தென்னவன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C/29283)

## லிபேட்டி அச்சுவேலி
இன்று முதல்
அஜித் இருவேடங்களில். சிம்ரன், விவேக் நடித்த



**வாலி** (ரீல்ஸ்)
தினசரி: 3.00, 7.00
காலை 11.00 **THE PEACE KEEPER**


# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு கேள்விகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2003 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு.ப.10.30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விகாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.**

02.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம். |
|---|---|---|
| 01) புதிய தளபாடங்கள் வழங்கல் (யு என் எச் சீ ஆர்) | 250/= | 2000/= |
| 02) புதிய தளபாடங்கள் வழங்கல் (பி.எஸ்.டீ.ஜி) | 250/= | 2000/= |

03. மேற்படி தளபாடம் வழங்கல் தொடர்பான வேலைகளுக்கு தளபாடம் உற்பத்தி செய்வதற்கான அனுமதிப்பத்திரமும், அனுபவமும், பதிவுள்ள பட்டறையும் அதற்குரிய பொருத்தமான இயந்திர வசதியும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்கள்.

04. மேற்படி பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும்.

05. பெறுமதிசேர் வரி (Vat Tax) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதிசேர் வரி (Vat Tax) சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

06. வேலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச்செய்து கேள்விப் பத்திரங்களை 22.08.2003 ஆம் திகதியிலிருந்து 27.08.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

07. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிநிதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறைகளில் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இருபிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு 28.08.2003 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

08. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படும் திகதியில் இருந்து இரண்டு மாத காலத்திற்குள் தளபாட வேலைகளைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

09. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**வ.செல்வராசா,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**தென்மராட்சி.**

*வலயக் கல்வி அலுவலகம்,*
*தென்மராட்சி.*
*19.08.2003.*

(சி-29675)(14-16)

# கண்ணீர் அஞ்சலி



## சிவசுப்பிரமணியம் விஜயன்

கனவுகள் பல கண்டிருந்தோம்
கண்ணீரைத் தந்து சென்றீர்
சிரித்த முகத்துடனே கலகலப்பாய்
பழகினீர் நினைவுகள்
உள்ளவரை நெஞ்சினில் நிறைந்திருப்பீர்.

**பிறப்பு : 03.10.1977**
**இறப்பு : 20.08.2003**

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*58,கன்னாதிட்டி,*
*யாழ்ப்பாணம்.*
(21677)(14-16)

**கோ.புவனேந்திரன் நகைத் தொழிலக ஊழியர்களும், நண்பர்களும்.**

# மரண அறிவித்தல்கள்

## சிவசுப்பிரமணியம் விஜயன்

நல்லூர் வடக்கு, கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் விஜயன் அவர்கள் நேற்று (20.08.2003) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ராஜிவலோசனாவின் அன்புக் கணவரும் சிவசுப்பிரமணியம் - புஸ்பராணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் ஸ்கைலா (ரோசி), ரேகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயபாலனின் (நேசம் அழகு நகைமாடம்) மைத்துனரும் விக்கினேஸ்வரன் (துரை)-பத்மதேவியின் அன்பு மருமகனும் தர்சனாவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைமகள் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*கல்வியங்காடு.*
(21676) (32-14-16)

தகவல்:
க.ஜெயபாலன்
(நேசம் அழகு நகைமாடம்)

## திருமதி பாக்கியலட்சுமி பேரம்பலம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், தலையாழியை வசிப்பிடமாகவும் யா/இந்து ஆரம்ப பாடசாலையின் நீண்டகால ஆசிரியரும் யா/கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியருமான திருமதி பேரம்பலம் பாக்கியலட்சுமி அவர்கள் நேற்று (20-08-2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பேரம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-அன்னபூரணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம்பிள்ளை, பராசக்தி ஆகியோரின் சகோதரியும் அன்பழகன் (லண்டன்), சந்திரிகா (கனடா), அறிவழகன் (ஆஸ்திரேலியா), வேணுகா சண்முகரட்ணம் (பிரதி அதிபர்,மானிப்பாய் மகளிர் கல்லூரி), அருளழகன் (கனடா), அம்பிகா (டாக்டர்,யாழ் வைத்தியசாலை), மதியழகன் (லண்டன்), சசிலேகா (கனடா), மணியழகன் (லண்டன்), மெய்யழகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தமிழரசி, பரந்தாமன், கருணை ஈஸ்வரி அம்பிகை, சண்முகரட்ணம், சாந்தி, சிறிஸ்கந்தராசா (டாக்டர், யாழ் போதனாவைத்தியசாலை), பிரேமகுமாரி, சேந்தன், பாமலா, வேதநாயகி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்வன், மயிலோன், நயனி, உமா, பிரணவன், பார்த்தீபன், திலீபன், லிதுசன் ,கிரிஜா, மாதுளா, ஆதவன், செந்தூரன், நிலானி, உமையாள், ராகுலன், ஷோபன், அருணி, ஷாலினி, அஞ்சலி, அபிராமி, விசாகன், சுஜிந்தன், ஜதுஷா, ஜனகன், அஞ்சலா, லக்ஸ்மன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-08-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு ஏடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*தலையாழி,*
*கொக்குவில்.*
**வை.பேரம்பலம் (கணவர்)**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(21675)

## திருமதி கந்தையா இரஞ்சிதம்

பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இரஞ்சிதம் அவர்கள் நேற்று (20.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும் ஜெயகீதன், ஜெயசீலன் (சீலன் ரேடியோ, T.V.மெக்கானிக், அச்சுவேலி), ஜெயபாலசிங்கம் (கொழும்பு), ஜெயகாந்தா (ஆசிரியை, புத்தூர் மெதடிஸ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக் கிழமை அவரது அச்சுவேலி இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி வல்லை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*
(சி-29677) (32-14-16)

தகவல்:
க.ஜெயசீலன் (சீலன்)
(மகன்)

## திருமதி கனகேஸ்வரி (கனகமணி) சுந்தரலிங்கம்

நாமகள் லேன், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி (கனகமணி) சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (20.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் சேனாதிராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதாகர் (ஜேர்மனி), கிஷ்ணா (ஜேர்மனி), குழலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலினி (ஜேர்மனி), ஜெசிந்தினி, இந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கார்த்திகா, சாதுயன் (ஜேர்மனி), அக்சயா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாமகள் லேன்,*
*கொக்குவில்.*
(21647)(14-16)

தகவல்:
சு.சுதாகர் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுதங்களையோ ஆள்களையோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடன் மானிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான இளைஞர்கள் இருவரும் சுயவிருப்பத்தின் பேரில் சமையல் பணிக்காகச் சென்றுள்ளனர். ஆறுமுகம் கிருபாகரன் (வயது 24), அரியகுமார் சாந்தகுமார் (வயது 24) ஆகிய இருவருமே அவ்வாறு சென்றவர்களாவர்.

அவர்களில் கிருபாகரன் என்பவரின் வளர்ப்புத் தாயாருக்கு இந்த உண்மை நிலை தெரிந்திருக்கவில்லை. சில தீய சக்திகளின் தூண்டுதலின் பேரில் முகமாலைக்குச் சென்ற அவர் படையினரிடமும் பொலீஸாரிடமும் முறையிட்டுள்ளார்.

அதே அடிப்படையில் அந்த இளைஞர்களை அச்சுறுத்திய பொலீஸாரும் படைத்தரப்பினரும் அவர்களிடமிருந்து வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அத்துடன், எமது அமைப்பின் சமையல் உதவியாளர் இமையனையும் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது தனது அரசியல் பணிக்காக கே.புகழ்மாறன் என்ற போராளி மோட்டார் சைக்கிளில் அவ்வழியே சென்றுள்ளார். இவரின் கட்டுப்பாட்டின் கீழேயே யோ.இமையன் சமையல் உதவியாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

தனது உதவியாளரின் கைது தொடர்பாக விசாரிப்பதற்காக - நீண்ட நேரத்தின் பின்னர் - அவ்விடத்துக்குச் சென்ற புகழ்மாறன் படைத்தரப்புடன் இமையனின் கைது தொடர்பாகப் பேச முயன்றுள்ளார்.

அப்போது, சம்பவத்துடன் தேவையற்ற விதத்தில் அவரையும் தொடர்புபடுத்தி படைத்தரப்பு புகழ்மாறனையும் கைதுசெய்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் படையினரின் ஒரு செயலே இது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ் அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளோம்.

உண்மை இதுதான், அவர்கள் எந்தவித ஆயுதக் கடத்தலிலோ ஆள் கடத்தலிலோ ஈடுபடவில்லை.

புலிகள் குறித்த தவறான அபிப்பிராயத்தை வெளியுலகுக்கு பிரசாரப்படுத்தும் நோக்குடன் திட்டமிட்ட அடிப்படையில் தீய சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட செயல் இதுவாகும்.

சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பற்ற இந்த நடவடிக்கைகள் தொடர்பாக மேல் நடவடிக்கைகளை எமது அமைப்பு எடுக்கவுள்ளது.

சாதாரண பொதுமகன், 24 வயதான இளைஞர்கள் இருவரை பட்டப் பகலில் பயணிகள் பஸ்ஸில் கடத்திச் சென்றதாகக் கூறப்படுவது நகைப்புக்கிடமானதாகும்.

போராளி புகழ்மாறனிடம் இருந்து சயனைட் குப்பி பிரித்தெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டதில் எவ்வித உண்மையுமில்லை. சயனைட்குப்பி மற்றும் தகடுகளை புகழ்மாறனே தனது சக போராளிகளிடம் கையளித்தார்.

- இப்படி சி.இளம்பரிதி தெரிவித்தார்.

(ம-9)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார். அது மதிலின் மீது தவறி வீழ்ந்ததினால் கொலை முயற்சி வெற்றியளிக்கவில்லை.

இது தொடர்பாக ஹரிச்சந்திரன் மன்னார் பொலீஸில் முறைப்பாடு செய்ததும் பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். எவரும் கைதாகவில்லை. அமைதி நிலவும் மன்னார் நகரில் இத்தகைய சம்பவம் நடைபெற்றது இதுவே முதல் முறை என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தக் காரியாலயத்துக்கு ஏற்கனவே பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ)


ஞானோதய அக்கடமி
சங்கத்தானை, சாவகச்சேரி
A/L 2004 Day Class
ஆரம்பம்:
கலைப் பிரிவு : 22.08.03 8.00p.m
வர்த்தகப் பிரிவு : 22.08.03 8.00p.m
கணிதப் பிரிவு : 23.08.03 11.00p.m


## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடியோன், அறிவு, ஜோர்ச் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

மற்றொரு குழுவினர் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டனர். மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா, கிஸ்ட்ரோ, பாரதிராஜ் ஆகியோர் அக்குழுவில் அடங்கியிருந்தனர். புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஏற்கனவே கொழும்பை வந்தடைந்திருந்தார்.

பாரிஸ் சந்திப்பில் கலந்துகொள்வதற்காகப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் தூயவன் ஆகியோர் ஏற்கனவே பாரிஸ் சென்றுள்ளனர்.(ம-12)

## நீதிமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்தைச் சேர்ந்த நவரத்தினம் கணேஸ்வரன் ஆகிய இரு சாட்சிகளும் நேற்று நீதிமன்றிற்கு சமுகமளித்திருக்கவில்லை.

இதனையடுத்து வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், சம்பந்தப்பட்ட இரு சாட்சிகளையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் மற்றுமொரு சாட்சியான யாழ். போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி ஸ்ரீராஜேஸ்வரனை மருத்துவப் பரிசோதனைப் பதிவேடுகளுடன் அடுத்த தவணைக்கு சமுகமளிக்குமாறும் நீதிவான் பணித்தார்.

2001 நவம்பர் மாதம் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நாரந்தனையில் வழிமறிக்கப்பட்டு மிகமோசமாகத் தாக்கப்பட்டார்கள். இந்தச் சம்பவத்தில் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் இருவர் உயிரிழந்தனர். தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் உட்படப் பலர் காயமடைந்தனர். (ம)

## பொலீஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் பெரும் விபரீதங்களை ஏற்படுத்திவிடும். தனி ஓர் இனத்திற்காக பொலீஸாரை ஆட்சேர்ப்பது மோசமான பின் விளைவுகளை - கட்டுப்படுத்த முடியாத நிலைமைகளை உருவாக்கிவிடும்.

பொலீஸாருக்கு அவசர அவசரமாக ஆட்சேர்க்கும்போது 'ஜிகாத்' போன்ற தீவிரவாத அமைப்புகளின் உறுப்பினர்களும் அதற்குள் இலகுவாக ஊடுருவிவிட வாய்ப்புண்டு.

அத்தோடு, இத்தகைய திடீர் முடிவுகள், அவசர செயற்பாடுகள் தற்போதைய சமாதான முயற்சிகளை மேலும் பின்தள்ளக்கூடியவை.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்-முஸ்லிம்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்துவதற்கு சில தீய சக்திகள் முயன்று வருகின்றன. பொலீஸுக்கு அவசரமாக ஆள்களைச் சேர்ப்பதன் மூலம் அதைத் தடுத்துவிட முடியாது.

"மாறாக மோதலைத்தூண்டிவிடும் சக்திகளுக்கு வாய்ப்பான சூழலையே அது ஏற்படுத்திக் கொடுக்கும்" இப்படி தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமரிடம் தெரிவித்தனர். இந்த ஆட்சேபனைக்கு பிரதமர் பதிலளித்து தமது கருத்துக்களை கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் மட்டுமே பொலீஸாருக்குச் சேர்க்கப்படுவார்கள் என்பதல்ல. தமிழ் பேசும் பொலீஸாரை ஆள்சேர்ப்புச் செய்யும்படியே உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வாறு சேர்க்கும்போது முஸ்லிம்கள் அதிகமாக உள்வாங்கப்பட்டு அதனால் கிழக்கில் பொலீஸ் சேவையில் இன விகிதாசாரம் மாற்றமடையும் எனத் தமிழர்கள் அஞ்சத் தேவையில்லை. இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்பட்டு, புலிகளின் காவல்துறையினரும் பொலீஸ் சேவைக்குள் உள்வாங்கப்படும்போது தமிழர்களின் தரப்புப் பிரதிநித்துவம் உறுதிப்படுத்தப்படும்.

"அவசர அவசரமாக ஆள்சேர்ப்பு இடம்பெற்றாலும், அதில் பொலீஸ் தலைமையகம் விழிப்பாக இருக்கும். தீவிரவாத சக்திகள் பொலீஸ் துறைக்குள் ஊடுருவ இடமளிக்கப்படமாட்டாது" என்று பிரதமர் தெரிவித்தார்.

கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று காலை 10.30 மணிக்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவையும் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவையும் சந்தித்து தங்களின் நிலைப்பாட்டை அவர்களுக்கு விளக்கவிருக்கின்றனர். *(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)*

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு விடுதலைப் புலிகள் வருகின்றனர். அரசு அவர்களின் சகல தேவைகளையும் பூர்த்திசெய்து கொடுக்கின்றது. இவையெல்லாம் நாட்டின் பாதுகாப்பிற்கு விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தலாகும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு விரைவாகக் காணப்படவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாகவே இருக்கிறார். எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு மேற கொண்டே தீர்வு காணவேண்டும் என்பதும் அவரது திடமான நம்பிக்கையாகும் - என்று கூறினார்.

வடக்கு - கிழக்கை தனித்தனியே பிரிப்பது தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டால் தற்போதைய சமாதான முயற்சியில் குழப்பங்கள் வராதா? என ஹரீம் பீரிஸிடம் கேட்கப்பட்டதற்கு,

"தற்போது கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்துவரும் படுகொலைகளும் ஏனைய சம்பவங்களுமே சமாதானத்துக்கு அச்சுறுத்தலானவை. தவிர, வடக்கு - கிழக்கைப் பிரிப்பது சமாதானத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது" - என்றார். (ம)

## மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரம தாக்கியதில் ஆபத்தான நிலையில் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா தினேஷ் (வயது 13) என்ற சிறுவனே மின்சாரத்தால் தாக்குண்டுள்ளான்.

பனம்பழம் பொறுக்கிய காணியில் நிலத்தில் கிடந்த கம்பி ஒன்றை எடுக்க முனைந்தபோது சிறுவனை மின்சாரம் தாக்கியதாகக் கூறப்பட்டது. (எ-29)



பொறியியல் பட்டதாரியாக
அரிய வாய்ப்பு
தமிழ்நாடு - சென்னை
அண்ணா பல்கலைக்கழகத்துடன்
இணைந்த
பொறியியல் கல்லூரிக்கான அனுமதி
தற்போது
யாழ். மாணவர்களுக்கு
நேரடியாக வழங்கப்படுகிறது.
B.ENGINEERING
(4 Years Degree)
ELECTRONICS & COMMUNICATION ENGINEERING (ECE)
MECHANICAL ENGINEERING (MECH)
ELECTRICAL & ELECTRONICS ENGINEERING (EEE)
COMPUTER SCIENCE & ENGINEERING (CSE)
இடம் : உதயன் கேட்போர் கூடம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 21 & 22 ஒகஸ்ட் 2003
நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை
தகுதி : ஜீ.சி.ஈ. உயர்தரம் கணித பிரிவில் 3 சித்திகள்
நேர்முக தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு அனுமதி உடன் வழங்கப்படும்.
(C/29658)
UTHAYAN Graphics


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.